நான் வளர்ந்தால் நாம் வளர்வோம்

# நான்

எதிர்பார்ப்புகள்



உளவியல் மஞ்சரி

மலர் 11
இதழ் 6

விலை 3/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான்

உளவியல் மஞ்சரி

இதழ் 6
மலர் 11

கார்த்திகை - மார்கழி
1985

## " எதிர்பார்ப்புகள் "

" நான் வளர்ந்தால் நாம் வளர்வோம் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்;

**வின்சன்ற் பற்றிக் O.M.I., B.A.**

இணை ஆசிரியர்.

**S. டேமியன் O. M. I., M. A.**

துணை ஆசிரியர்கள்:

**ராஜன் மங்களா**
**ஜோசப் பாலா**
**நீக்கிலஸ்**
**S. வசந்தருஜ்**

தொடர்பு:-

**F. L. N. குருஸ்**
**லொசிங்ரன்**
**வலன்ரைன்**

விநியோகம்:

**அற்புதராஜ்**
**B. யூட்குலேந்திரன்**
**சத்திய சீலன்**
**L. கிரேஷன்**

விளம்பரம்;

**இம்மானுவல்**

முகவரி ;

**"நான்"**
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை.

அடுத்து வெளிவருகிறது!

# "சிறப்பிதழ்"

உங்கள் ஆக்கங்களை

**15-12-85**க்கு முன்

அனுப்பி வையுங்கள்

---

உள்ளே

மௌனங்கள் கலையும் போது [தொடர்]
சுருதி மாற்றம் [சிறு கதை]
நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்
எமது எதிர் பார்ப்புக்கள் [கட்டுரை]
உளவியல் தேர்வு
உளவியலாளர் வரிசையில்
எதிர்பார்ப்புக்கள். [கவிதை]
கருத்துக் குவியல்.
நான் பதில்கள்
குறுக் கெழுத்துப் போட்டி

---

அழைக்கின்றோம்!

10—11—85 மாலை 3 மணிக்கு மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்திற்கு

நீங்கள் எதிர்பார்த்த மூன்று நூல்களின் வெளியீட்டு விழா!

உங்கள் கவனத்திற்கு:

86ம் ஆண்டுக்கான சந்தாக்களை புதுப்பித்து சிறப்பிதழைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் நண்பர்கட்கும் வாழ்த்தை தெரிவிக்க அவர்கள் பெயரிலும் சந்தா செலுத்தி ஓராண்டு வாழ்த்தைப் கூறுங்கள்.

ஓர் ஆண்டு சந்தா 15/- ரூபா மட்டுமே.

சந்தாப்பணம் அனுப்புவோர்

ஆசிரியர் பெயருக்கு அனுப்பவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விடிவை நோக்கி ...

எண்ணற்ற எதிர்பார்ப்புகளையும் எதிர்பாராத ஏமாற்றங்களையும் எதிர் கொள்ளுவதே மனித வாழ்க்கையாகும். எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் பொழுது ஏற்றம்பெறும் மனித உள்ளம் அவை முறியடிக்கப்படும்பொழுது சீற்றம் கொள்வது சகஜமாகும். எனினும், மனிதன் மற்றவர்களோடு கொள்ளும் தொடர்பின் தாக்கம் ஆரோக்கியமானதாகக் காணப்படின் எதிர்ப்புக்களையும், ஏமாற்றங்களையும் தாங்கிக் கொள்வது இலகுவாகின்றது.

எதிர்பார்த்தபடி நிகழ்வுகள் அமையாதவிடத்து, அவை கூறும் படிப்பினையை அலட்சியப்படுத்தும் மன நோக்கு எழலாம். அது தவறு. கற்பனையும் கடின உழைப்பும் தீவிரமான சிந்தனையும் துணிச்சலான செயற்பாடும் இணைந்த எதிர்பார்ப்பில் மலர்வதுதான் வெற்றிகரமான வாழ்க்கை. அரிய சிந்தனைகளுடன் புரட்சிகரமான வாழ்க்கையை மேற்கொள்ளமுனையும் பொழுது பெரிய ஆபத்துக்களும் பாரிய இழப்புக்களும் ஏற்படலாம். உரிய நேரத்தில் அவற்றை எதிர்கொள்ளும் ஆற்றல்படைத்தோரே எரியும் விளக்குகளில் மடியும் விட்டில்களைப் போன்று மாறாது, ஒளிரும் தீபங்களாக மிளிரமுடியும். ஒரு புதுயுகத்தை எதிர்பார்க்கும் கவிஞனின் குரல் உங்கள் உள்ளங்களில் ஒலிக்கட்டும்.

“ விடியலுக்கில்லை தூரம் விடியும் மனதில் இன்னும் என் பாரம்?
உன் நெஞ்சம் முழுவதும் வீரம் இருந்தும் கண்ணில் இன்னும் என் ஈரம்? ”
யுத்தங்கள் தோன்றினும் வெடிச்சத்தங்கள் தொடரினும்
ரத்தங்கள் சிந்தினும் பாதை மாறலாமா?
பயணங்கள் தொடரட்டும்! புதுயுகம் மலரட்டும் !!

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போதுமே எதிர்பார்ப்பு

ஜே. அலெக்ஸ் யூட் ரூஜ்

கருச்சுவரின் நடுவில்
நான்
கண்மூடியிருந்த போது
கண் திறக்கும்
ஒளியுலகை
எதிர்பார்த்தேன்

தாயை விட்டு
நான்
தனியுயிராய் வந்து
வெளியுலகில் நின்றபோது
பாசத்தின் பிணைப்பிலே
அன்னையின் நிழலை
எதிர்பார்த்தேன்

விளையாட்டுப் பருவத்தில்
இந்த
விந்தை உலகினில்
ஓடிவரும்
புதுமைகளின்
நினைவுகளை
எதிர்பார்த்தேன்

கனவில் மிதக்கும்
மூவாறு வயதினிலே
என்
இதயம் நிறைந்த
காதலின்
எழில் முகத்தை
எதிர்பார்த்தேன்

பின்னர் !
கடல் தாண்டிச்
சென்று வந்து
விலங்கற்ற
ஈழ மண்ணைப்
போராடி, போராடி
எதிர்பார்த்தேன்.

கழுத்தினிலே
கயிறுகட்டி நான்
மனையாளை ஏற்றபோது
கருவூரக் கதைசொல்லும்
ஒரு
கனிமுத்தக் குழந்தையை
எதிர்பார்த்தேன்.

குழந்தைகளிற்கு
நான்
தந்தையாய் ஆனபோது
குழந்தைகளின்
உருவம் கொள்ளும்
குழந்தைகளை
எதிர்பார்த்தேன்.

இங்கு,
பல்லும் போய்
வாழ்வும் போய்
தனி மரமாய்
ஓர் கணத்தில் தோன்றும்
மரத்தின் விழிம்புகளை
எதிர்பார்க்கிறேன்.

பரிசு அளிப்பவர்: **Sayons Bake House, Passaiyoor,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனங்கள் கலையும்போது ... 6

— சௌந்தரன் —

அதிபர் இறந்த செய்தி மூர்த்திக்கு அறிவிக்கப்படவில்லையே! அப்படியிருக்கும்போது இந்தச் செய்தி அவனுக்கு எப்படித் தெரிய வந்தது? கொழும்பிலிருந்து அவன் யாழ்ப்பாணத்துக்கு ஏன் திரும்பினான். வெளிநாட்டுப் பயணம் திடீரென்று ரத்தாகி விட்டதோ? மூர்த்தியின் தாயார், தங்கை புவனா, காதலி பிரியா, டேவிட், நெருங்கிய உறவினர்கள், மற்றும் அங்கு கூடியிருந்தோர் அனைவரது உள்ளத்திலும் உதித்த கேள்விகள் இவை. தன்னை மறந்து தகப்பனை நினைந்து புலம்பிக்கொண்டிருக்கும் மூர்த்தியிடம் இதனை யார் கேட்பது. கேட்கும் நிலையில் ஒருவருமே இல்லை. கேட்டாலும் பதில் கூறக்கூடிய நிலையிலா அவன் இருக்கின்றான்? கொள்ளி வைப்பதற்கு மகன் இங்கு இல்லையே என்ற குறை இல்லாமல் போயிற்று, என்று அங்கிருந்த பலர் தமக்குள் கதைத்துக் கொண்டார்கள்.

உற்றார், உறவினர் நண்பர்கள், மாணவர்கள் பழைய மரணவர்கள், ஆசிரியர்கள், எல்லாம் புடைசூழ இறுதிக் கிரியைகளுக்காக அதிபரின் பூதவுடல் சுடுகாட்டை நோக்கி விரைகிறது. "காடுவரை பிள்ளை கடைசிவரை யாரோ" என்பது போல கொள்ளிக்குடம் சுமந்து கொண்டு கண்ணீர் பெருக்கெடுத்தோட அடைத்துப்போன குரலில் "அப்பா" "அப்பா" என்று அழுது கொண்டு ஊர்வலத்தின் மத்தியில் சென்று கொண்டிருந்தான் மூர்த்தி. வீட்டிலே தாயாரும் தங்கையும் துயரதின் எல்லையில் துவண்டு போய் மூர்ச்சைநிலை அடைந்து விட்டனர். அவர்களை அருகிலிருந்து பார்த்து தேற்றிக்கொண்டிருந்தாள் பிரியா.

இறுதிக் கிரியைகளை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மூர்த்தியின் உள்ளத்தில் தகப்பனாரைப் பற்றி பல்வேறு தரத்திலுள்ளவர்கள் தமது இரங்கலுரையின் போது அன்று ஆற்றிய புகழுரைகள் திரும்ப ஒலித்துக்கொண்டிருந்தன. பெரும்பாலானோர் அவரது கடமையுணர்வு. கண்ணியம், நேர்மை, பரோபகார சிந்தை போன்ற நல்ல பண்புகளைப் புகழ்ந்து உரைத்தனர். அவற்றை

**பழிவாங்கல், பிரிவு, வெறி, தாழ்வுமனப் பான்மை, எதிர்பார்ப்பு ஆகிய அம்சங்களை கொண்டமைந்த தொடர்கதையே**

"மௌனங்கள் கலையும்போது"

**இறுதிக் கட்டம் இது இவ்வாரத்தோடு இத்தொடர் கதை நிறைகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெல்லாம் எண்ணி எண்ணி அந்த நிலேக்குத் தான் இல்லேயே, டேவிட்டின் விடயத்தில் தான் ஒரு கறைபட்டவனுகிவிட்டானே, என்று வருந்தினன் அவன். கொழும்பிலிருந்து வீடு திரும்பியவுடன் அப்பாவின் காலில் விழவேண்டும், டேவிட்டின் பணத்தை தான் திருடிய சம்பவத்தை அவரிடம் கூறவேண்டும், அந்தப் பாவத்துக்குப் பிராயச்சித்தமாக கொழும்பிலே பணத்தைப்பறிகொடுத்து தவியாய்த் தவித்த ரமணனுக்கு தான் பண உதவி செய்து அவனே வெளிநாட்டுக்கு அனுப்பிய சம்பவத்தைக் கூற வேண்டும். அதன் மூலம் அவர் மனதைக் குளிரவைக்க வேண்டும், தன் மகன் நேர்மையானவன், தன்னேப் போன்றவன் என்று அவர் மகிழ வேண்டும், அதைப்பார்த்து தன் அன்னே மனம் குளிர வேண்டும், தங்கையின் சந்தேகம் தீர வேண்டும், பிரியாவின் மனம் மகிழவேண்டும் என்றெல்லாம் எவ்வளவோ எதிர்பார்த்துப் பத்து மணிநேர பஸ் பயணத்தை பத்து யுகங்களாக அனுபவித்து யாழ்ப்பாணம் வந்த மூர்த்தி, அத்தனேயும் நிறைவேருமல் அப்பாவின் மரணத்தை எதிர்நோக்க வேண்டியாகிவிட்டதே என்று நினைத்து நினைத்து வருந்தினன். அப்பாவின் எண்ணத்தில் தானெரு திருடன் மட்டுமல்ல, உண்மையை மறைத்தவன் என்ற எண்ணம் கூடக்குடிகொண்டிருந்திருக்குமே, அந்தக் குறையை மனதில் வைத்துக் கொண்டே அவர் மறைந்து விட்டாரே, அந்தத் தவறுக்காக அவரிடம் சிறு தண்டனே கூடப் பெற்றிருந்தாலும் அது அவர் மனதுக்கு சாந்தியைக் கொடுத்திருக்குமே என்றெல்லாம் வருந்தியது அவன் மனம். தனது மௌனங்கள் கலேயுமுன் தகப்பன் மறைந்தது அவனுக்கு வருத்தமாகவே இருந்தது. மரண வீட்டில் டேவிட்டைக் காண நேர்ந்த ஒவ்வொரு கணமும் அவன் மனம் அனலிடைப்பட்ட புழுவாய் துடிதுடித்தது. ஆண்டவனே இந்த வேதனேக்கு ஒரு எல்லேயே இல்லேயே என்று அவதிப்பட்டுக்கொண்டிருந்தான் அவன்.

புயல் அடித்து ஓய்ந்தது போலிருந்தது அங்கு பெரும்பாலானேர் மூர்த்தியிடம் விடைபெற்றுச் சென்றுவிட்டனர். ஒரு சிலர் மட்டும் ஆங்காங்கே மௌனமாக உட்கார்ந்திருந்தனர். மூர்த்தியின் தாயார் கண்ணீர் வற்றிப் போனவளாய் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தாள். தங்கை புவனு அழுதழுது ஓய்ந்தவளாய் தோழி பிரியாவின் தோளில் முகம் புதைத்தபடி கிடந்தாள். கவலேயே உருவான மூர்த்தியையே பார்த்துக்கொண்டு அடிக்கடி அரும்பும் கண்ணீர்த்துளிகளேத் துடைத்துக்கொண்டிருந்தாள் பிரியா.

தன் நண்பனே இழந்த கவலேயுடன் மூர்த்தி படும் வேதனேயையும் பார்த்து வருத்தப்பட்டுக் கொண்டு அங்கு ஒரு கதிரையில் அமர்ந்திருந்தார் டேவிட். அவரது மனேவியும் அவர் அருகே உட்கார்ந்திருந்தாள். பஸ்ஸிலே அதிபர் இறந்த செய்தியை அறிவித்த அந்தசிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்ஜினியரும் தனது நன்றிப் பெருக்கைக் காட்டும் வகையில் இன்னும் அங்கு அமர்ந்திருந்தார். மௌனம் அங்கு சிறிது நேரம்வரை நீடித்தது. யாரும் எதுவுமே பேசவில்லை. மூர்த்தி சிந்தனை வசப்பட்டிருந்தான்.

அமைதியை முறித்துக்கொண்டு டேவிட் மனைவி சகிதம் எழுந்து மூர்த்தி அருகில் சென்றார். "தம்பி இனி யோசித்துப் பிரயோசனம் இல்லை. கடவுளுடைய சித்தம் அப்படி, இனிமேல் நடக்க வேண்டியதைப் பாரும்." தன்னுடைய ஐநூறு ரூபாவைத் திருடியவன் என்ற கோபம் எல்லாவற்றையும் மறந்து டேவிட் அமைதியாகக் கூறினார். அணை கடந்த வெள்ளமானான் மூர்த்தி, தன்னை மறந்துவிட்டான். அவன் "என்னை மன்னித்து விடுங்கள் சேர், என்னை மன்னித்து விடுங்கோ" என்றபடியே அவரது காலில் விழுந்து குழந்தையைப் போல அழத் தொடங்கிவிட்டான் மூர்த்தி.

அங்கிருந்த அனைவரும் ஒருகணம் எதும் புரியாமல் திகைத்தனர். டேவிட்டுக்கு அதிர்ச்சியாக இருந்தது. "என் தம்பி என்ரை காலில் .." என்று காலடியில் கிடந்தவனை தூக்கி நிமிர்த்தினார் டேவிட். "சேர் கொழும்பில் வைத்து உங்கள் பணத்தைத் திருடிய இந்தக் கயவனை மன்னித்து விடுங்கள் சேர்" மூர்த்தி அவர் கையைப் பற்றிக் கொண்டு கதறினான். "அப்பா தந்த பணத்தை வீட்டில் தவறுதலாக விட்டுவிட்டுப் போய் அதைக் கொழும்பில் யாரோ திருடி விட்டார்கள் என்று எண்ணி வேறு வழியின்றி உங்கள் பணத்தைத் திருடிவிட்டேன். என்னை மன்னிச்சு விடுங்க சேர்" என்று தான் திருடியதற்கான சூழ்நிலையை டேவிட்டிடம் கூறிக் கண்ணீர் விட்டான் மூர்த்தி. டேவிட்டுக்குத் துக்கம் தாழ முடியவில்லை. எற்கனவே அவர் மனம் மூர்த்தியின்பால் இழகிப் போய் இருந்தது. இப்போது உருகியே போய்விட்டது. "தம்பி நடந்தது நடந்துவிட்டது. தவறு செய்வது மனித இயல்பு சந்தர்ப்பம் சூழ்நிலை கள்தான் மனிதனைத் தவறு செய்யும்படி தூண்டுகின்றன. நான் உன்னை மன்னித்து விட்டேன். இனி ஆக வேண்டியதைப் பார் தம்பி" என்று மூர்த்தியைத் தேற்றுவதற்கு டேவிட் எவ்வளவோ கஷ்டப்பட வேண்டியிருந்தது அங்கிருந்த அனைவரும் இச்சம்பவத்தை அமைதியாக இருந்து பார்த்துக் கொண்டிருந்தனர். பலருக்கு விடயம் புரியவில்லை; மூர்த்தியின் தாயார், தங்கை புவனு, காதலி பிரியா, டேவிட், டேவிட்டின் மனைவி இவர்களைத்தவிர, எனையோருக்கு இச்சம்பவம் விளங்கியிருக்க நியாயமில்லைத்தான், இந்த ஐநூறு ரூபா சம்பவத்தில் இதுவரை காலமும் மூர்த்தியின் மௌனம் மேற்குறிப்பிட்டவர்களின் மனத்தில் பல் வேறு சலனங்களை உருவாக்கியிருந்தது. ஆனல் இன்று அவன் மௌனம் கலைந்தபோது அச்சலனங்கள் சூரிய ஒளி பட்ட பனித்துளி போல நீங்கிச் சென்றுவிட்டன. மகன் மீது தாய் கொண்ட சந்தேகம், அண்ணன் மீது தங்கை புவனு கொண்ட சந்தேகம், காதலன்மீது பிரியா கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவநம்பிக்கை, டேவிட்டின் மீது அவன் மனைவி இன்னும் வைத்திருந்த அந்த சிறிய ஐயப்பாடு, எல்லாமே மூர்த்தியின் மௌனத்தின் கலைவில் கலைந்து சென்றுவிட்டன. ஆனாலும் அதிபர் மறைவதற்கு முன்னால் இந்த மௌனம் கலைந்திருந்தால் அவரது ஆத்மாவுக்கு சாந்தியாக இருந்திருக்குமே என்றுதான் அனைவரும் கவலைப்பட்டனர்.

டேவிட்டும் மனைவியும் விடைபெற்றுச்சென்றனர். கண்ணீரோடு விடைகொடுத்தான் மூர்த்தி, மீண்டும் அங்கு ஒருவித அமைதி இடையிடையே சில பெருமூச்சுக்கள் பிரியாவின் மனதில் அமைதியின்மை வெளிநாட்டுக்குசென்று போன மூர்த்தி ஏன் திரும்பிவந்தான் தகப்பன் இறந்த செய்தியை யாரும் மூர்த்திக்கு அறிவிக்கவில்லையே! கொழும்பில் என்ன நடந்தது? இக்கேள்விகளுக்கெல்லாம் விடை அறிய அவள் மனம் துடிதுடித்தது. தாயாரும் புவனாவும் இவ்விடயம்பற்றி மூர்த்தியுடன் பேசக்கூடிய நிலையில் இல்லை. ஆனாலும் அவர்கள் உள்ளத்திலும் ஒரு மூலையில் அத்தகைய கேள்விகள் எழுப்பப்பட்டுக் கொண்டேயிருந்தன. மூர்த்தியோ மௌனமாக இருந்தான். அந்த மௌனம் எப்போது கலையுமென்று ஆவலாயிருந்தாள். பிரியா அன்று பயணம் புறப்பட்ட போது தனது போட்டோவைக் கையில் கொடுத்து என்னை மறந்து விடமாட்டீர்களே என்று குலுங்கிக் குலுங்கி கண்ணீர் விட்டழுத காட்சி பிரியாவின் நினைவுக்கு வந்தது. அந்தக் காட்சியை நினைத்த போது அவள் கண்களில் மீண்டும் கண்ணீர்த்துளிகள் பனித்தன. அவள் அழுத காட்சியைக் கண்டுவிட்டுத் தானும் கலங்கிக் கண்ணீர் விட்டுப் பின் தன்னைத் தேற்றி விடைபெற்றுச் சென்ற மூர்த்தி வெளிநாடு செல்லாமல் மீண்டும் திரும்பி வந்துவிட்டான் என்றால் அதற்கான காரணத்தை அறிய அவள் மனம் துடிப்பது இயல்புதானே. அருகில் போய்க் கதைக்கலாம் என்று நினைத்தாள். ஆனால் ஆட்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்களே. புவனாவை விட்டுக் கேட்கலாமென்றால் அவளோ சோகத்தின் பிடியில் சூழ்ந்திருக்கிறாளே.

நேரமோ போய்க் கொண்டிருந்தது. பிரியா பொறுமையிழந்து விட்டாள். தன் இருக்கையை விட்டு எழுந்தாள் மூர்த்தியின் அருகில் சென்றாள் கொழும்பில் நடந்த சம்பவங்களை மூர்த்தி கூறிய பின்னர் தான் பிரியா அமைதியடைந்தாள். இருவரும் சிறிது நேரம் அமைதியாகக் கதைத்துக்கொண்டிருந்தனர். கவலையின் பிடியில் வாழும் மூர்த்திக்கு பிரியா ஆறுதல் கூறிக்கொண்டிருந்தாள். இறுதியில் வெளிநாட்டுப்பயணத்தைக் கைவிடும்படியும், உள்ளூரில் ஏதாவது வேலைக்கு முயற்சி செய்யும்படியும் அதற்குத் தனது அப்பா மூலம் உதவி செய்வதாகவும் பிரியா கூறினாள். தன்னைவிட்டுப் பிரிந்து செல்வதைப் பிரியா விரும்பவில்லை என்பதை உணர்ந்த மூர்த்தி பார்க்கலாம் என்று தலையாட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக நேரம் மூர்த்தியுடன் கதைப்பதை பிரியா விரும்பவில்லை. அவனுடன் கதைப்பதை நிறுத்திவிட்டு புவனுவுக்கு அருகில் போய் அமர்ந்தாள். புவனுவிடம் விபரங்களைக் கூறினாள். புவனு தாயாரிடம் நடந்தவற்றைக் கூறினாள். தாயோ மெய்சிலிர்த்துப்போனாள். தன் கணவனின் பரோபகார சிந்தை தன் பிள்ளைக்கும் அமைந்திருப்பதை எண்ணி மனதிற்குள் பெருமைப்பட்டாள். கொழும்பில் ரமணனுக்கு உதவி செய்து தன் வெளிநாட்டுப் பயணத்தையே தியாகம் செய்த அந்தத் தியாக சம்பவத்தைக் கேட்டு உவப்படைவதற்கு அவர் இல்லையே, என்ற கவலைதான் அவளை ஆட்கொண்டது. மீண்டும் அவள் கண்களில் நீர் பெருகியது. தன் பிள்ளை செய்த அந்த நற்செயலைக் கேட்டு பெருமை கொள்ளாமல் அவனைப் பற்றிய ஒரு தப்பான அபிப் பிராயத்தோடு கண்களை மூடிவிட்டாரே என்று கூறி அழ ஆரம்பித்து விட்டாள். பிரியா அவளைத் தேற்ற முயன்றாள். எனினும் இதுவரை கேள்விமேல் கேள்வி கேட்டுக் கொண்டிருந்த உள்ளங்களுக்கு மூர்த்தி யின் மௌனத்தின் கலைவில் பதில் கிடைத்தது ஒரு ஆறுதலாகவே இருந்தது.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. பிரியா அடிக்கடி மூர்த்தி வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தாள். டேவிட், அவர் மனைவி, நன்றி மறவாத அந்த சிவில் எஞ்ஜினியர், ஆகியோரும் இடையிடை யே வந்து மூர்த்திக்கும் குடும்பத்தார்க்கும் ஆறுதல் கூறி வந்தனர். ஒருநாள் சனிக்கிழமை அனைவரும் ஒரே நேர தில் சந்திக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. பல்வேறு விடயங்கள் பற்றி அலசி ஆராய்ந்த பின்னர் இறுதியில் மூர்த்தியின் எதிர்காலம் பற்றிக் கதைக்கத் தொடங்கினர்.

டேவிட் மூர்த்தியைப் பார்த்துக் கேட்டார் "தம்பி மூர்த்தி இனி இந்தக் குடும்பப் பொறுப்பெல்லாம் உம்முடைய தலையில் தான் அதை யெல்லாம் கவனிப்பதற்கு உமக்கு ஒரு தொழில் தேவை, ஏதாவது முயற்சி எடுக்கிறீரா"? என்று கேட்டார்.

"உள்ளூரில் எவ்வளவோ முயற்சி செய்துவிட்டேன் இங்கு வேலை கிடைப்பது குதிரைக் கொம்புதான் வெளிநாட்டுக்குப் போய் உழைக் கத்தான் முயற்சி செய்கிறேன்" இது மூர்த்தியின் பதில். "ஜேர்மனி பிரான்ஸ் என்றெல்லாம் போய் நிறையப்பேர் வேலை இல்லாமல் நிற்கிறார்கள், அங்கே போய்ச் சும்மா இருப்பதில் பிரயோசனம் இல்லை" குறுக்கிட்டாள் பிரியா. அவளுக்கு மூர்த்தி வெளிநாடு போவதில் இஷ்டமில்லை.

"பிள்ளை சொல்வது உண்மைதான் ஆனால் மத்திய கிழக்குப்பக்கம் போகலாம்தானே. வேலையோடு போகலாம் நல்ல சம்பளமும் எடுக்க லாம்" இது சிவில் எஞ்ஜினியரின் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மத்திய கிழக்குப் பக்கம் போகலாம்தான் ஆனுல் அதற்கு நிறையப் பணம் தேவைப்படும். அத்தோடு இப்போ எல்லா ஏஜன்சிகளையும் நம்பவும் முடியாது" தன் கருத்தை மூர்த்தி கூறி முடிக்கமுன் குறுக்கிட்டாள் பிரியா.

"மத்திய கிழக்கு கொன்ட்ருக்ட் இரண்டு அல்லது மூன்று வருடங்கள்தான் அதற்குப்பின் இங்கு வந்து என்ன செய்யப்போகிறீர்கள்?" ஆர்வத்துடன் கேட்டாள் பிரியா. யாருமே பதில் சொல்லமுடியாது மௌனமாக இருந்தனர். பிரியா தொடர்ந்தாள். "பணம் பணம் என்று இன்று எல்லோருமே வெளிநாடுகளுக்குச் செல்லுகிருர்கள். வெறும் பணத்திற்காக ஆசாபாசங்களைத் துறந்து இல்லற பந்தங்களையே மறந்து வெறும் இயந்திர வாழ்க்கை வாழ்வது ஒரு வாழ்வா? வெறும் ஆடம்பர மோகத்தால் பெருமையடிக்கும் ஒரு விளம்பர வாழ்க்கை தானே அவர்கள் வாழ்கிருர்கள். ஒரு ஏழை வீட்டில் காணப்படும் நிம்மதிகூட வெளிநாட்டுப் பணக்காரரிடம் காண முடிவதில்லையே... நீ என்ன சொல்லுகிருய் புவனு" என்று புவனுவுக்குக் கூறும் பாங்கில் தன் மனநிலையை மூர்த்திக்கு வெளிப்படுத்தினுள் பிரியா. மூர்த்தி தன்னை விட்டுப் பிரிவதைத் தான் விரும்பவில்லை என்பதை அவள் புலப்படுத்தினுள்.

பிரியாவின் எதிர்பார்ப்பு மூர்த்தி இங்கேயே ஒரு நல்ல அரசாங்க வேலை பார்த்துக் கொண்டு தங்கிவிட வேண்டும் என்பதாகவே இருந்தது. ஒவ்வொரு இளம் பெண்ணிடமும் இருக்கும் எண்ணப் பிரதிபலிப்பு பிரியாவிடமும் இருக்கத்தான் செய்தது. அவள் மட்டும் இளமைக் கால இனிய நினைவுகளுக்கு விதி விலக்காகிவிடமுடியுமா என்ன?

அனைவரும் பேசாமல் இருந்தனர். பிரியா மீண்டும் தொடர்ந்தாள். "மூர்த்தி உங்களிடம் தகுதி உண்டு, திறமையும் உண்டு உங்களுடைய அப்பாவுக்கு இருக்கும் இவ்வளவு பெரிய செல்வாக்கைப் பயன்படுத்தி இங்கேயே ஒரு நல்ல வேலை எடுக்கலாம். அங்கிருந்து கொண்டே நீங்கள் மேற்படிப்பும் படிக்கலாம். பட்டம் பெறலாம். தந்தைவழி மைந்தன் என்ற வகையில் அப்பாவின் புகழை மேலும் உயர்த்தலாம் அதை விட்டுவிட்டு வெறும்பண மோகத்திற்கு அடிமையாகாதீங்க" தன் மனதில் உள்ளதை எடுத்துரைத்தாள் பிரியா.

மூர்த்திக்குத் தர்மசங்கடமாய்ப் போய்விட்டது. பருவப் பூரிப்பிலே கண்ணிறைந்த கணவனொருவனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் புவனு ஒருபுறமும், இளமைக்கால வசந்த எண்ணங்களை மனதில் உலவவிட்டுப் பார்த்து அவைகளை அனுபவிக்கத் துடித்துக் கொண்டிருக்கும் பிரியா மறுபுறமுமாக மூர்த்தியின் சிந்தனையைச் சிதறடித்துக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமைப் புயலிலே சிக்கிச் சீரழியத் தொடங்கிவிட்ட அந்த நிலையில் தன்னையும் எதிர்காலத்தையும் எதிர்காலப் பொறுப்புக்களையும் மனதில் போட்டுக் குமைந்து கொண்டிருந்தபோது தபால் காரனின் மணியடிக்கும் சத்தம் கேட்டது, கடிதத்தை வாங்கிப் பிரித்தான் மூர்த்தி

அன்புள்ள நண்பன் மூர்த்திக்கு,

நான் ஜேர்மனி வந்து சேர்ந்துவிட்டேன். உன் உதவியால்தான் இது நடந்தது. இங்கு பல நண்பர்களைச் சந்தித்தேன். காலத்தால் அழியாத உன் தியாக உதவியைச் சொன்னேன். மறுநாளே அவர்கள் பத்தாயிரம் ரூபா பணத்தை என்னிடம் தந்து இந்தத் தொகையை மூர்த்திக்கு அனுப்பி மூர்த்தியையும் இங்கு வரும்படி கடிதமெழுது என்று எனக்குக் கூறினார்கள்.

இந்தப்பண உதவி எனக்காகவோ உனக்காகவோ இல்லையாம். உன் அப்பாவிடம் தாங்கள் படித்ததற்கும் அவரிடம் பெற்ற உதவிகளுக்கும் நன்றி செலுத்தும் வகையில் அமைகிறதென்றும், தந்தைக்குப் பின் மைந்தன் தப்பாமல் அவர் வழியே வாழ்வதற்குத் தம் அன்புக் காணிக்கை என்றும் குறிப்பிட்டார்கள். அதிபரைப்பற்றி அவர்கள் அடிக்கடி புகழ்ந்து பேசுகிறார்கள் அத்தனை உயர்வான ஒரு மனிதனுக்கு நீ மகனாய்ப் பிறந்ததால்தான் உன்னிடம் இத்தனை தியாக மனப் பாங்கும் அமைந்திருக்கிறது இத்துடன் நான் அனுப்பும் பத்தாயிரம் ரூபாய்க்கான காசோலையைப் பெற்றுக்கொள்ளவும் இப்படிக்கு நண்பன் ரமணன்.

ரமணனின் நன்றியுணர்ச்சியை நினைந்து தன்னை மறந்து நின்றான் மூர்த்தி. அவனது நெஞ்சத்தில் இப்போது இமயமாகத் தெரிவது அதிபர் ஆறுமுகம் என்ற அந்த உருவம்தான் ரமணனின் கடிதம் மட்டுமல்ல சுடுகாட்டிலே மக்கள் காட்டிய கண்ணீர் அஞ்சலிகளும், தகப்பனாரின் சேவை, அவரின் நல்லொழுக்கம், என்பவற்றை அவனுக்குத் திரும்பத் திரும்ப நினைவூட்டிக் கொண்டிருந்தன.

திரைகடலோடித் திரவியம் தேடி என்ன? அப்பா ஒரு அதிபராக இருந்து இத்தனை உயர்ந்த மனிதனாக வாழ்ந்து உலகை வென்று நிற்கிறாரே என்பதை நினைத்தபோது ஆசிரியத் தொழிலுக்கு நிகராக வேறு எதுவுமே அவனுக்குத் தோன்றவில்லை.

"என்னதம்பி கடிதத்தோடு எல்லாவற்றையும் மறந்து விட்டீராக்கும்" மூர்த்தியின் மௌனநிலையைக் கலைத்தார் டேவிட்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை, இல்லை, "பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே" என்று நான் படித்திருந்ததை நினைத் தால் எனக்கு வேறு எங்கும் செல்ல வேண்டுமா என்ற எண்ணம்தான் மேலோங்கி நிற்கின்றது. அப்பா ஒரு சொற்ப பணம் சம்பாதிக்கும் ஒரு அதிபராக இருந்து இத்தனை மனித உள்ளங்களிலும் ஒளியேற்றி குருவாகி நிறைந்து நிற்கும்போது அவர் சாதித்ததைவிட நான் இந்தப் பணத்தில் எதை சாதித்துவிடப் போகிறேன் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது" என்ருன் மூர்த்தி.

மூர்த்தியின் உள்ளத்தில் தெளிவு ஒன்று ஏற்பட்டு விட்டதை உணர்ந்த டேவிட் சொன்னார். "அப்படியானால் நீங்கள் ஆசிரியத் தொழிலுக்கு விண்ணப்பித்துப் பாருங்கோ நாங்கள் யாரையாவது பிடித்து முயற்சித்துப் பார்க்கிறோம் என்று கூறினார்.

கொழும்பிலே தங்கிநின்றபோது கஷ்டப் பிரதேச ஆசிரியர் பதவிக்கு வேடிக்கையாக விண்ணப்பித்ததை மூர்த்தி நினைவுபடுத்தினான். சமு தாயத்தை சீர்ப்படுத்துவதற்கேற்ற நல்ல வழிகளைக் காட்டுவதோடு தம் வாழ்விலும் அதனைக் கடைப்பிடித்து தாமும் வாழ்வதுடன் தம் மாணவர்களையும் வாழவைக்கும் ஒரு சிறந்த பணியாக ஆசிரியத் தொழில் விளங்குவதை மூர்த்தி மனப்பூர்வமாக உணர்ந்தான். அந்தப் பணியிலேயே தன்னை அர்ப்பணிக்க மூர்த்தி திடசங்கற்பம் பூண்டு விட்டான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள் இங்கு தெய் வத்திலும் பார்க்க குருவுக்குக் கூடிய முக்கியத்துவமல்லவா கொடுக்கப் பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது மூர்த்தி தன் தந்தையின் பணியைத் தொடர்வதற்கு தனது வெளிநாட்டுப் பயணத் திட்டங்களையெல்லாம் தியாகம் செய்துவிட்டு ஆசிரியர்ப் பணியைத் தேர்ந்தெடுக்கத் தீர்மானம் எடுத்துவிட்டான்.

இந்தப் பதவிமட்டும் கிடைத்துவிட்டால், அப்பாவைப் போல நானும் ஒரு சிறந்த ஆசிரியனாக வாழ முடியும். இந்த சமூகத்தின் புரையோடிய புண்களைக் கழுவும் சிறந்த தொழில் அதைத்தவிர வேறு என்ன இருக்கிறது என்ற எதிர்பார்ப்போடு அவன் உறுதியாக நின்றான். எல்லோரும் அவனது அசைக்க முடியாத அந்த இலட்சிய வேட்கையைப் புரிந்தவர்களாக அவன் ஆசிரியனாகப் போகும் அந்த நாளை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அந்தப்பதவியை அவன் அடை வதற்காகத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்யத் தயாராக இருந்தனர் டேவிற்றும், சிவில் எஞ்சினியரும் அது மட்டுமன்றி மூர்த்தியை மேற் படிப்புப் படிக்கவைத்து அவனை ஒரு பட்டதாரியாக்கி, அதிபரின் வழியில் அவனையும் வழி நடத்தித், தமது நன்றிக் கடனைத் தீர்த்துக் கொள்ளத் திடசங்கற்பம் பூண்டனர் அவர்கள் அந்தப் பணியில் தன்னை யும் அர்ப்பணித்துக் கொண்ட பிரியாவின் மன தில் மூர்த்தி ஒரு இலட்சிய புருஷனாக நிறைந்து நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைந்து தீர்க்க ஓடும்...

நெடுந்தீவு
லக்ஸ்மன்.

தினைப் புனத்தில் வள்ளியுடன்
திளைத்த கதை போதும் — உடல்
நனைத்த கதை போதும்
நினைப்புகளில் எம்மவரின்
எழுச்சிகளே வேண்டும் —பகை
எதிர்க்கும் வீரம் வேண்டும்.

பண்டை வரலாறு கூறும்
பாங்கு புகழ் போதும் —அந்தப்
பழம் பெருமை மோகம்
அண்டையுளோர் கொடுமைதனை
அழிக்கும் உறுதி வேண்டும் — துயர்
அகற்றும் துணிவு வேண்டும்.

அலைகடலைத் தாண்டி ஓடி
அகதியாதல் போதும் — என்றும்
அநாதையாதல் போதும்
உலைக்களத்தின் பொறியிலெங்கள்
உதிரம் கொதிக்க வேண்டும் —சொந்த
உரிமை காத்தல் வேண்டும்.

அடிமை என்ற நிலையைத் தொற்றி
அமைதி கெடுத்த போதும் —கொடும்
அநீதி இழைத்த போதும்
விடிவைத் தேடும் மக்கள் துயரம்
விரைந்து தீர்க்க ஓடும் — இளம்
வீர நெஞ்சு வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[சிறுகதை]

# "சுருதி மாற்றம்"

— ஜனகமகள் சிவஞானம் —

"காசை வாங்கேக்கை மட்டும், காலைப் பிடிச்சுக், கையைப்பிடிச்சி மாய்மாலக் கண்ணீர் விட்டு வாங்கிப் போடுவாய். திருப்பித் தரவேணுமெண்டு பிறகு நான் தான் உனக்கு ஞாபகப்படுத்த வேணும"

காட்டுக் கத்தலாய் செவிப்பறையில் மோதிய அக்கா சரோஜினியின் குரல் கேட்டுத் திடுக்குற்றவளாய், ஈரக்கையினைப் புடவைத் தலைப்பில் துடைத்து விட்டவாறு லக்ஷ்மி வெளியே வருகிறாள். நெஞ்சினுள்ள சுமையிலும், வயிற்றினுள்ள இன்னொரு ஜீவனின் சுமையும் அவளைச் சிரமப்படுத்தினாலும் அதனையும் பொருட்படுத்தாதவளாய் லக்ஷ்மி விரைந்து வருகிறாள்.

"இதுக்கு மட்டும் குறைச்சலில்லை மூண்டு பெட்டை இந்த நாலாவதும் பெட்டைதானோ?ஆர் கண்டது" இரகசியமாய்த் தனக்குள் முணுமுணுத்தவாறு சரோஜினி தன் தோள்பட்டையில் இடித்துக் கொண்டமையின் காரணத்தினை லக்ஷ்மியால் ஓரளவு புரிந்து கொள்ள முடிந்தாலும் எந்தவிதமான பதிலும் சொல்லத் தோன்றாமல் மெல்லத் தலை குனிகிறாள்.

இந்த முறை எண்டாலும் ஒப்பிறேஷன் செய்யிற யோசனை இருக்கோ, இல்லையோ? "

"......"

"என்னைப் பார் மூண்டும் பொடியங்கள். மூண்டையும் ஒப்பிறேஷன் செய்து தான் எடுத்தது, உனக்குத் தெரிஞ்ச விஷயம் தானே லக்ஷ்மி. மயக்கம் தெளிஞ்ச உடனே, நேஸ்மார் ஆம்பிளைப் பிள்ளை எண்ட உடனே எனக்கு உச்சி குளிர்ந்திடும் என்ரை வயித்தைக் கீறிக் கிழிச்ச நோவுகள் கூட அந்த நிமிஷமே பறந்து விடும், பெட்டை பிறந்திருந்தால் அந்த நிமிஷமே என்ரை உயிர் பிரிஞ்சாலும் ஆச்சரியப்படுவதுக்கில்லை"

தன்னுடைய இமாலய சாதனையின் புகழ்ச்சியினை சரோஜினி அவிழ்த்து விட்டுக்கொண்டிருக்கையில் லக்ஷ்மிக்கு மனதுக்குள் எரிச்சலெரிச்சலாகவே இருந்தது.

"இவவும் ஒரு பொம்பிளையாய் இருந்து கொண்டு பெட்டை எண்டு ஏன்? இவ்வளவு இளக்காரம் பண்ணிற. கடவுளாலை தரப்பட்டு, பத்துமாதம் வயிற்றிலை சுமந்து பெற்ற பிள்ளை ஆணோ?பெண்ணோ? ஒரு தாய்க்கு எல்லாம் பிள்ளை தானே?

தனக்குள்ளாய் புழுங்கிறாள் லக்ஷ்மி மனதில் நினைத்ததனை வெளியே சொல்லிக் கொள்ளும் தைரியமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதியும் அற்றவள் அவள். இரண்டடுக்கு மாளிகையில் ஏழ்மை என்றால் என்னவென்றறியாத சரோஜினி எங்கே? வறுமைக்கு வாழ்க்கைப் பட்டுத் தினம், தினம் அல்லற்படும் இவள் எங்கே?

எனக்கேன் வீண் கதையள் என்னட்டை வாங்கின காசை எப்ப? லக்ஷ்மி நீ திருப்பித் தரப் போறாய்?

"வந்தக்கா, குத்தி வைச்ச குரக்கன் கிடந்தது. அதைக் கடைக்குக் குடுக்கப்போட்டார் வந்த உடனே உங்கடை காசைக் குடுத்தனுப்புகிறன் குறை நினைக்காதேங்கோ அக்கா"

லக்ஷ்மியின் பேச்சின் நாணயம் தெரிந்தோ என்னவோ, திரும்பி நடக்கக் காலெடுத்து வைத்த சரோஜினி,

'லக்ஷ்மி காசு கிடக்கட்டும். இப்ப வீட்டை குடுத்து விடாத பிறகு நான் வந்து எடுக்கிறன்",

"ஏனக்கா?'

உனக்குச் சொன்னாலென்ன? என்ரை மூத்தவனுக்குப் பொம்பிளை பார்க்கப் போகப்போறம். முழுவியளத்துக்கு அங்க வந்து நிக்காதையுங்கோ.,,

முகத்திலறைந்தது போலக் கூறி விட்டு விடுவிடென சரோஜினி போய் விட்டாலும், அந்த வார்த்தையின் தாக்குதலின் வேதனை மறைய லக்ஷ்மிக்குப் பலமணி நேரம் எடுத்தது. எளியாரை வலியார் வருத்தின்,வலியாரைத்தெய்வம் வருத்தும்" என்ற மனச்சமாதானத்தைத் தனக்குள் பிரகடனப்படுத்திக் கொண்டு மீண்டும் தன் வீட்டு வேலைகளுக்குள் மூழ்கிப் போகிறாள் லக்ஷ்மி.

லக்ஷ்மிக்கு நான்காவதாயும் ஒரு பெண் குழந்தை பிறந்து விட்டது. ஒரு பவுடரையும். ஒரு சவர்க்காரத்தையும்கொண்டு பிள்ளையைப்பார்க்க வேணும் என்ற சாட்டில் வருகிறாள் சரோஜினி.

"நாலாவதும் பெட்டை போலத் தான் கிடக் கெண்டு நான் முதலே. லக்ஷ்மிக்குச் சொன்னனான் .என்ன? லக்ஷ்மி!"

குசலம் விசாரிக்கவந்திருக்கும் இன்னொரு பெண்ணுக்குச் சொல்வது போன்ற சாட்டில் லக்ஷ்மியின் மனதை வார்த்தைகளால் சரோஜினி தைக்கிறாள். 'பெண் குழந்தைகள் என்றால் என் இத்தனை இளக்காரம்? சீர் கெட்டுப் போன இந்த சமுதாயம் சீதனம் என்ற ஒரு எல்லைக்குள் பெண்ணை எள்ளப்படுத்துவதாலா? என் இந்த வக்கிர புத்தி என்ற கேள்விக்குப் பதில் புரியாதவளாய் தன் விழியோரங்களை நனைத்துக் கொள்வதைத் தவிர வேறொன்றையுமே அவளால் செய்ய முடியாது போய் விட்டது.

'என்ன? தான் செய்தாலும் பெத்த தாய் தகப்பனுக்குக் கொள்ளிவைக்க ஒரு ஆம்பிளைப் பிள்ளை இல்லை யெண்டால் நாங்கள் பிறந்ததில் ஒரு பலனுமே இல்லைப் பாருங்கோ

"உண்மைதான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட இருந்தவள் சரோஜினிக்கு ஒத்து ஊதுகிருள்.

நாட்களின் விரைவில் மாதங்கள் இரண்டு கடத்து விட்டன. முதல் ஒரு மாதமும் துடக்கு வீடென்று சரோஜினி வந்து போகாமைக்குக் காரணத்தைத் தனக்குள்ளாய் கற்பித்துக் கொண்டாலும். பின்னுனில் தன் வீரப்பிரதாபங்களை அளந்து கொட்டவும், பிறரின் ஓட்டை, உடைசல்களைக் குத்திக் காட்டி இன்பங் காண வென்றுலும் வந்து போயிருப்பாவே எனத்தனக் குள்ளாய் நினைத்த லக்ஷ்மி பக்கத்து வீட்டுக்கு வருகிருள்.

'செல்லம்மாக்கா? சரோஜினி அக்காவைக் கன நாளாய் இந்தப் பக்கம் காணேல்லை என்ன விஷயம்?,,

"என்ன? லக்ஷ்மி தெரியாமலே கேக்கிருய்"

உண்மையாய் எனக் கொண்டும் தெரியாது.நான்குழந்தைப் பிள்ளைக் காறி எங்கையோ? வெளிக்கிடக் கொள்ள, வாறவை போறவையோடை கதைக்க எனக்கெங்கை அக்கா நேரம்.? என்னக்கா நடந்தது?"

'சரோஜினியின்ரை இரண்டாவது மோன் கொழும்பிலை இருந்து வாறனெண்டு எழுதினதாம். ஐந்து நாளாசியும் இன்னும் வந்து சேரலேயாம்".

"உண்மையாமே? அக்கா !'

"ஓமாம் கொழும்புக்கும் போன் பண்ணிக் கேட்டவையாம் பொடியன் வெளிக்கிட்டு வந்திட்டுதாம் எண்டு சொன்னதாம். பாவம் சரோஜினி· சாப்பரடு, தண்ணி, வெறி இல்லாமல் கிடந்து அழுது கொண்டிருக்குக்குதாம். எத்தனை நாள். எத்தனை முறை லக்ஷ்மியின் இதயத்தை சரோஜினிகுத்திக்குதறியி ருக்கிருள். அப்படி இருந்தும் லக்ஷ்மி, சரோஜினிக்காய், அவவின் துயரத்துக்காய் பச்சாதப்பட்டாள்,வேதனையுற்ருள்

"இன்னு மொரு விஷயம் தெரியுமே?"

செல்லம்மா மெதுவாய் கிசுகிசுத்ததில் அவளையே ஆச்சரியமாய் நோக்குகிருள் லக்ஷ்மி.

"இடிக்கு மேலை இடி யெண்டு சொல்லுவினம் அது சரோஜினிக்குத்தான் பொருத்தம்"

'செல்லம்மாக்கா நீங்கள் என்ன? சொல்லுறியள்"

"மூத்தவனுக்குப் பெரிய இடங்களிலை கலியாணங்கள் பேசிப் பொம்பிளை பார்த்துக்கொண்டு,தட்டிக் கழிக்சுக் கொண்டிருந்தவாவல்லே சரோஜினி"

"ஓம் எனக்கும் சொன்னவா."

"அவன் வேலை செய்யிற இடத்திலை ஒரு பெட்டையைத் தன்ரை பாட்டிலை விரும்பிச் செய்து கொண்டு இவவுக்கும் சொல்லாமல் வெளிநாட்டுக்குப் போட்டானும், . எந்த இடம் எண்டும் தெரியாதாம்"

''ஐயோ?பாவம்"

"பாவமெண்டு சொல்லாதேஅவவின்ரை கொழுப்பை அடக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் கடவுள் இந்தத் தண்டனையை இவவுக்குக் குடுத்திருச்கிருர் லக்ஷ்மி”

வீட்டுக்கு வந்த லக்ஷ்மியின் மனது இரக்கத்தின் காரணமாய் இம்சைக் குள்ளானது. சரோஜினி அக்கா வைப் பாக்க வேணும். அவவுக்கு ஆறுதல் சொல்ல வேணும் என்று ஒரு மனது துடித்தாலும்” என்ரை வேதனையைப் பாத்து எல்லாரும் சேந்து விடுப்பு, விண்ணணக் கதை அளக்கிறதுக்கு வந்திட்டியளோடி என சரோஜினி அக்கா சீறி விழுவா என்ற அச்சத்தில் இரண்டுங் கெட்டான் நிலையில் நின்று தவித்துக் கொண்டிருந்தாள் லக்ஷ்மி.

அன்றய பொழுது கழிந்து விடிகாலை வேளை. மனதின் ஆவலை அடக்கிக் கொள்ள மாட்டாதவளாய் எழுந்த லக்ஷ்மி, ஏணைக்குள் முனகிய குழந்தையைஆட்டி விட்டு, வாசலில் கிடந்த வாங்கில் படுத்திருந்த கணவனிடத்திலும் சொல்லிக் கொண்டு சரோஜினியின் வீட்டை நோக்கி விடுவிடென நடந்து வருகிருள். வாசலில் கிடந்த நாய் மெல்ல உறுமி விட்டு மீண்டும் முடங்கிக் கொண்டதில் லக்ஷ்மி தைரியமாய் உள்ளே வருகிருள். வீட்டில் உள்ளவர்களின் மனதில் துயரக் குப்பைகள் நிறைந்திருப்பதனைப் போன்று வீட்டு முற்றத்திலும், குப்பைகள் நிறைந்திருந்தன. வெறுமனே சாத்தியிருந்த கதவினைத் தள்ளித் திறந்து, சரோஜினி படுத்திருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டு லக்ஷ்மி உள்ளே வருகிருள்.

இவளைப் பார்த்ததும் எதுவுமே? பேசத் தோன்ருதவளாய் சரோஜினி குலுங்கிக், குலுங்கி அழுகிருள். அவளுக்கு ஆறுதல் வார்த்தை சொல்லி ஆசுவாசப்படுத்துகிருள் லக்ஷ்மி.

“எனக்கு மூண்டும் பொடியள் எண்டு எல்லாரும் பாத்துப் பாத்துக் கண்ணூறு பட்டுத்தான் எனக்கின்டைக்கு இந்த நிலை.” இருந்தும் தனக்குள் பொருமுகிருள் சரோஜினி. “லொக்.லொக்” என இருமிய வாறு நெஞ்சைத் தடவிக் கொண்டு வெளியே நடக்கிருர் சரோஜினியின் கணவன்.

“லக்ஷ்மி, அவர் ஹாட் பேஷன்ற் இந்தளவு இடிகளுக்குள்ளாலும் கடவுளின்ரை கருணை தான் அவரைக் காப்பாத்தி வைச்சிருக்கு”

இறுமாப்பினுள்ளும் இடித்து போகிருள் சரோஜினி. தன்னுல் முடிந்தளவு ஆறுதல் வார்த்தைகளை ஈத்து விட்டு லக்ஷ்மி திரும்ப எத்தனிக்கையில் சரோஜினி இடைமறிக்கிருள்

“லக்ஷ்மி. அந்தக் கடைசி அறைக்கை என்ரை இளையவன் படுத்திருக்கிருன். அவனை எழுப்பி விட்டிட்டுப் போ”

ஒரு மனிதனுக்குத் துன்பங்கள் துயரங்கள் வரவேணும் என்ற நியதி இருந்தால் அதனை யாராலுமே தடுக்க முடியாது என்ற உண்மை லக்ஷ்மிக்கு நித்சனமாய் புரிந்தது. சரோஜினி குறிப்பிட்டது போல், அவவின் இளைய மகனை எழுப்பவென லக்ஷ்மி போகிருள். அங்கே ? அங்கே ..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுமையான படுக்கையும் "தான் விருப்பப்பட்டு வீட்டை விட்டுப் போவதாயும், தன்னைத் தேட வேண்டாம்" என்ற ஒரு சிறு துண்டுக் கடிதம் மாத்திரமும் கிடக்கின்றன. லக்ஷ்மி விறைத்துப் போகிருள்.

அவளைப் பலமுறை அழைத்துப் பார்த்து பதிலில்லாத நிலையில் சரோஜினியே அவ்வறைக்கு எழுந்து வருகிருள். விஷயத்தினைப் புரிந்து கொண்ட போது அவளுக்கு அழக் கூடத் தோன்றவில்லை. எல்லா எதிர் பார்ப்புகளுமே சமாதி யாக்கப்பட்ட அவஸ்தையில் அமிழ்ந்து போகிருள் சரோஜினி.

"லக்ஷ்மி உ உ.. உன்னைப் போலை மூண்டையும் பொட்டையாப் பெற்றிருந்தால் இந்நேரம் எனக்கு இந்தக் கதி வந்திருக்காதடி"

அவளின் ஆணவமும் அகம்பாவமும் எல்லாம் எங்கே? வழிந்தோடிது எனவியந்து நிற்கிருள் லக்ஷ்மி.

"இதை நான் அவரிட்டை எப்பிடிச் சொல்லப் போறன் நல்லதைப் போல ஒரு பொல்லாப்பு இவருக்கு நடந்திட்டால் கொள்ளி வைக்க, கடைசிக் கடமை செய்யக் கூட என்ரை கண்ணுக்கு முன்னுலை ஒரு பிள்ளையில்லையே" சரோஜினியைத் தேற்ற முனைந்து தோற்றுப் போய் நிற்கிருள் லக்ஷ்மி.

# நாளை நோக்கிய நகர்வு

## கரவையூர் குணம்

கருவறையில் தோன்றி கல்லறைக்குள் மறையும் வரை இந்த மண்ணிலே வாழும் எந்த ஒரு மனிதனது உள்ளத்தின் ஆழத்தில் உறைந்திருக்கும் ஒவ்வொரு வகையான எதிர்பார்ப்புகள் கருவாகி, உருவாகி, உயிருள்ள, உணர்வுள்ள உயிர்த்துடிப்பாகி மலர்ந்து இறுதியில்உலர்ந்து மனதைவிட்டு உதிர்வடைந்து விடுகின்றன.

எதிர்பார்ப்புகள் பெரும்பாலும் உளம் சம்பந்தப்பட்ட உந்தல்களிலிருந்து எழும் ஒருவகையான உணர்வுகளாகவே உருவெடுக்கின்றன. எதிர்பார்ப்புகள் பற்பல. வாழ்க்கையில்' எதனையாவது எதிர்பார்த்து வாழ்ந்தால்தான் வாழ்க்கை சுவையாக இருக்கும். எதிர்பார்த்தது இன்று கிடைக்காமல் போகலாம். அதற்காக எதிர்பார்ப்பது என்றும் கிடைக்காது என்று இருந்திடலாமா? ஆனல் எதிர்பார்ப்புகள் யாவும் வாழ்க்கையில் நிறைவேறிட வேண்டும் என மனப்பால் குடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தால் அவை நிச்சயம் ஏமாற்றத்தில் வந்து முடியும், காரணம் பல எதிர்பார்ப்புகள், அங்கலாய்ப்புகள், ஏக்கங்கள் பதட்டங்கள்,திட்டங்கள் நாம் நினைத்தபடி அமைவதில்லை. எதிர்பார்ப்பது கிடைத்தால் என்ன, கிடைக்காவிட்டால் என்ன என எதிர்பார்த்துக் கொண்டிருப்பதே ஒரு நிறைவைத்தரும் மன மகிழ்வாகவும், நாளை என்ற பொழுதை நோக்கிய நகர்விற்கு வழியாகவும் அமைகின்றது.

பல சமயங்களில் எதிர்பார்ப்புகள் எதிர்பாராதவைகளாக அமைந்து விடுவதனால் பலர் பலத்த ஏமாற்றங்களைத் தழுவி மன அமைதியின்றி உளைச்சலுடனும்,மனவேதனைகளுடனும், மனநோயுடனும் வாழ்கின்றனர். ஏன் இப்படியொரு நிலை உருவாகின்றது என்ற வினவை எழுப்பினால் விடை, அலட்சியமான, அர்த்தமற்ற, நிகழமுடியாத பகற்கனவுகள் போன்ற நிகழ்வுகளை நினைத்து எதிர்பார்ப்பதை அவதானிக்கலாம். நிகழும் என ஒரு காரியத்தை எதிர்பார்த்து பலநாள் காத்திருந்து இறுதியில் நிகழவில்லையே என்ற ஏக்கத்தில் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகி, ஏமாற்றம் விரக்தியாகி, விரக்தி மன உளைச்சலையும் மன நோயையும் ஏற்படுத்துவதை அனுபவத்தில் காணலாம். உதாரணமாக, கருத்தரிக்க முடியாத நிலைக்கும் தன் கருப்பை பழுதடைந்து இருப்பதைத் தெரிந்தும் ஒரு பெண் தன் பழுதடைந்த கருப்பையில் ஒரு சிசு உருவாகும் என பல மாதங்கள் எதிர்பார்த்து இருந்தால் ஏமாற்றமாகவே அமையும்.

எமது வாழ்க்கை என்னும் காலச் சக்கரம் நாளை நமதே, இந்த நாடும் நமதே என்று நாளும் நுகர்வடையச் செய்வதற்கு எதிபார்ப்புக்கள் உற்ற துணையாக நின்று உதவிபல புரிகின்றன. பல எதிர்பார்ப்புக்களால் பின்னப்பட்டதே வாழ்க்கையாகும். எதிர்பார்ப்புக்கள் இன்றி வாழ்க்கை அமையுமானால் அது உப்புப் புளிப்பற்ற, சுவையிழந்த பண்டம் போலாகி விடும். நாளை,நாளை என்று எமக்கு நம்பிக்கை கொடுத்து எம்மை நுகர வைக்கிறது. எனவே, எதிர்பார்ப்புக்களை ஏற்றதோர் முறையில் நாம் எதிர்கொண்டால் வளமிகு வாழ்க்கையை நாம் அனுபவிக்கக்கூடியதாக அமையும்.

எனவே,வாழ்க்கையில் நியாயமானதோர் முறையில் நடக்கக் கூடிய நிகழ்வுகளை நினைத்து எதிர்பார்த்திரு. ஆனால் ஏமாற்றங்களைத் தழுவச் செய்யும் நிகழ்வுகள் என்றும் இதயத்தின் எதிர்பார்ப்புக்களாக அமையாது இருக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்ப்புகளின் எண்ணிக்கைகள்

— M. பத்மா மாலினி. —

எக்கத்தினூடே எண்ணிக்கைகள் அலைமோத
எவர்க்கும் தெரியாமல் ஏங்குகிறது.
கண்களோ ஓரிடத்தில் குத்திட களநிறைந்த மனமோ
கனவுலகில் சஞ்சரிக்க,
காளையவன் உறவை எதிர்பார்க்கும் கன்னி
காணமுடியாவிடில் கலங்குகிறாள் எண்ணி.
பட்டம் விடும் பாலகன்
பாடசாலை சென்றதும் மாணவன்
பகல் இரவாய் படிக்கிறான்.
பட்டம் விட்டவன் இப்போது படிப்பது?
பலரது அவதூறுகளையும்
பதட்டமின்றித் தாங்கி நின்று
படவுலகில் ஆடுகிறார்கள், பாடுகிறார்கள்
பரந்த மனத்துடன் எதற்கு?
துள்ளுகிறார்கள், குதிக்கிறார்கள், ஓடுகிறார்கள்
களைத்தாலும் சளைத்திடார்கள்
விளையாட்டுகளில் பங்கு பெறும்
வீரர்கள், வீராங்கனைகள், எதற்காக?
களைபிடுங்கி பயிரிடுகிறார்கள் களைப்பினால் கண்கள் சோர
வெயிலின் கொடுமையினையும் பாராது
இவர்களின் உழைப்பிற்கு காரணம்?
ஆழ்கடலில், சிறுபடகில்
அலைமோதும் ஆபத்தான வேளையில்
வலை வீசுகிறான் மானிடன் எதற்காக?
தனது அழகு பலியாவதையும் தெரிந்து
பச்சிளம் குழந்தைக்கு பாலூட்டுகிறாள் அன்னை
அந்தப் பாலகனுக்கு, எதற்காக?
கேட்டதெல்லாம் கொடுக்கும்
பாரபட்சம் பாராத தெய்வம்
அதுபார்க்கும் மனிதனிடம்
கருணை காட்டுகின்றதே எதற்காக?
குறுகிய அறையினுள்
விலங்குகள் கரங்களை நசுக்க விழிமூடாமல்
மௌனமாய் விரதமாம்
சாகும் வரை உண்ணாவிரதமிருக்கிறார்களே!
அந்த வீரத்திற்குக் காரணம்?
விலங்குகளை விலக்கிட
வீரர்கள் பலரின் உயிரைக் குடிக்கும்
போராட்டங்களைத் தொடருகிறார்களே - இந்நாட்டில்
முழுமூச்சாக இயங்கும் ஓரின மக்கள் எதற்காக?
எச்செயல்களுக்கும் எதிர்பார்ப்புண்டு
எதிர்பார்ப்பில்லையேல் செயல்களில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது எதிர்பார்ப்புக்கள்

## சி. சாந்தலட்சுமி

உறவில் உருவாகிய மனிதன் உடல் அழிந்து போகும் வரை எத்தனையோ எதிர்பார்ப்புகளுக்கு உட்படுகிறான். பிறந்தவுடன் எந்தக் குழந்தையும் முதலில் எதிர்பார்ப்பது அன்னையின் அன்பான அரவணைப்பைத்தான். முதற்படியிலே அன்புடன் இணைந்த எதிர்பார்ப்புத் தொடர்கிறது. தமக்குப் பிறகும் ஒவ்வொரு குழந்தையும் மனிதப் பண்புடன் வாழ வேண்டும்;செயற்கரிய செயல்களைச் செய்து தமக்குப் பெருமை தேடித்தர வேண்டும் என்றே பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஈன்ற பொழுதைவிடப் பிள்ளைகளை நாடு புகழ வெற்றிக்கிண்ணத்துடன் பார்க்கும் போதுதான், பெற்றோரின் உள்ளங்கள் பேருவகை கொள்கின்றன. இதனால் குழந்தையின் உடல் வளர்ச்சிக்கென்று நாள்தோறும் ஊட்டமுள்ள உணவுகளை நாட்டமுடன் கொடுப்பார், ஆனால் உள வளர்ச்சிக்கு ஆதரவளிப்போர் சிலரே. வளரும் குழந்தை பலவற்றை விரும்பும் சிலவற்றை வெறுக்கும். அது விரும்பாததைத் திணிப்பது தான் சில பெற்றோருக்கு முக்கிய பணியாகவும் இருக்கும். பெரும் எதிர்பார்ப்புக்களுடன் இவர்கள் ஊட்டி வளர்த்தும் அவர்கள் உருப்படாமல் போவதற்குக் காரணம் பெற்றோர் அவர்களைப் புரிந்து கொள்ளாமையே. விளைவு எதிர்பார்ப்பு ஏமாற்றமாகிவிடுகிறது.

அலைமீது பிறந்த நிழல் போல் மறைவது தான் வாழ்க்கை. வாழ்வு நிலையற்றது; எனினும் நிலையானவற்றை எம்மால் செய்ய முடியும். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் சீருடன் செம்மையுற வாழ அழைக்கப்பட்டவர்களே! ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஆற்றல்கள், திறமைகள்,பண்புகள் உண்டு. அவற்றை வளர்த்தால், எவரும் இன்னொருவரை நம்பி வாழவேண்டியதில்லை. தன்னை உணர்ந்தவனே உயர்வடைகிறான். பணத்திலோ பட்டம் பதவியிலோ அவன் உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தலைகுனியாமலே வாழ்வான். வீண் எதிர்பார்ப்புகளுக்கு அவன் இடம் கொடுப்பதில்லை.

இன்றைய சமுதாயத்தை ஆராய்ந்து பார்த்தால் எதிர்பார்ப்புகளும், வெறித்தனங்களும் மிகுந்த சூறுவளிதான் எங்கும் சுழன்றடிக்கிறது; மந்தாமருதம் வீசமறுக்கின்றது. தெளிவடைந்த உள்ளங்கள் தென்படுவதில்லை. பணம், அதிகாரம், சொத்து, உரிமை இவைதான் நம் மத்தியில் மனப்பூர்வமாக வேண்டப்படுகின்றன. நாமும் இருட்டுலகில் குருட்டாட்டம் போடும் கூத்தாடிப் பொம்மைகளாக மாறிவிடுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் கொடுக்க முடியாததை அவர்களிடம் இருந்து எதிர்பார்ப்பதை நாம் தவிர்க்க வேண்டும். கடமையைச் செய்;பலனை எதிர்பாராதே என்கின்றது பகவத்கீதை. நாமோ அதிகமதிகம் எதிர்பார்க்கிறோம். அயலவரிடம் இருந்தும் ஆண்டவரிடம் இருந்தும் எதிர்பார்க்கிறோம். எதிர்பார்ப்புக்களை எண்ணி எண்ணியே வேதனையுறுகிறோம்; வெந்து மடிகிறோம். பிரச்சனைகள் வரும்போது தப்பியோடத் துணிகின்றோம். ஏன்? நெஞ்சில் உரமும் இல்லை; நேர்மைத் திறனும் இல்லை.

மன்னிப்புப் பெற விழைகின்றோம்; அன்பைப் பெறத் துடிக்கின்றோம்; ஆனால் ஏங்கும் உள்ளங்களை அலட்சியப் படுத்துகின்றோம். எம்மைப் பொறுத்தவரையில் அன்பிற்கும் மன்னிப்பிற்கும் நாம் தகுதி அற்றவர்கள் என்பதை எம் செயல்களே உணர்த்துகின்றன. தவறான பாதையிலேயே நின்று தடுமாறாது, மேற்கொண்டு நல்ல படியாகத் தொடர்ந்து செல்லவே நினைக்கின்றோம்; அமைதியை ஆசிக்கின்றோம்; நல்வாழ்வை அடைய விரும்புகிறோம்.

இளையோரின் உள்ளத்தில் இருக்கும் எதிர்பார்ப்புக்கள் தான் எத்தனை! ஒவ்வொரு இளைஞனுக்கும் இளம் பெண்ணுக்கும் ஆயிரம் ஆசைகள், எதிர்பார்ப்புக்கள், இலட்சியங்கள், திட்டங்கள் இருக்கின்றன. வளரும் இளைஞன் தன்னை ஒரு மனிதனாகப் பிறர் மதிக்க வேண்டும்; ஏற்றுக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறான். இளம் உள்ளங்கள் மீது குறை காணுவதைவிட்டு; புரிந்து கொள்ள முற்படவேண்டும். தமது திறமைகளை, செயல்களைப் பிறர் பாராட்ட வேண்டும் என எதிர்பார்க்கும் அவர்களுக்கு அவ்வப் போது தேவைப்படும் சமயங்களில் தட்டிக் கொடுத்து ஊக்கம் அளிக்க வேண்டும். இவர்களின் முக்கிய செயல் முறைகள் முழுமை அடைவது, அவர்களின் குடும்பம், கல்வி நிலையம் சமுதாயம் என்பவற்றைச் சார்ந்தே இருக்கின்றது. இளைஞர்களின் திறமைகளை ஆராய்ந்தறிந்து ஆக்கச் சக்திகள் வளரவும் முழுமையாக செயற்படவும் அவர்கள் வாழும் சமுதாயம் உதவக் கடமைப்பட்டுள்ளது.

விதையை நிலத்தில் போட்டவுடன் முளைப்பது இல்லை; விரைவில் பலனைக்கொடுப்பதும் இல்லை. எந்த ஒரு பணியையும் இளைஞர்களிடம் கொடுக்கும்போது உடனடிப்பலனை எதிர்பார்ப்பதைத் தவிர்த்து அவர்களைப் புரிந்து கொள்ள முற்படவேண்டும். இளைஞர்களின் சில நியாய எதிர்பார்ப்புகளுக்குச் செவிமடுத்து ஆதரவு கொடுக்கும்போது, வளரும் சமுதாயத்தில்உள்ள இளைஞர்கள் ஒளிமயமான நாளைய எதிர்காலத்தின் சிறந்த தலைவர்களாவர். அதேவேளையில் இளையோரும் தமக்குக் கொடுக்கப்படும் சுதந்திரத்தை பொறுப்புணர்வுடன் ஆக்கப்பணிக்கெனச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவிட வேண்டும். வீண் பொழுது போக்கிச் சோம்பித் திரிவோர் தமக்குத்தாமே பிரச்சனைகளைத் தேடிக் கொள்வர். எனக்கு நானே தலைவன்; என் வாழ்வுக்கு நானே பொறுப்பாளி என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்திருக்க வேண்டும்.

மனிதன் என்பவன் உலகவாழ்வின் நலம் அனைத்திலும் துன்பம் அனைத்திலும் கருத்தும் கவலையும் கொண்டவன். மானிடரான நமக்கு எத்தனையோ பிரச்சனைகள்-அதைத் தொடர்ந்து எதிர்பார்ப்புக்கள், மன அங்கலாய்ப்புக்கள் உண்டாகின்றன. நல் வாழ்வை எதிர் நோக்கும் ஒவ்வொருவரும் முதலில் உண்மை, ஒழுக்கம் என்பவற்றைக் கடைப் பிடிக்கும் போதுதான் அதற்கான வழி பிறக்கின்றது.

# "நினைத்ததெல்லாம் நடந்து விட்டால்"

## T. M. அன்ரனிப்பிள்ளை *LL. B*

நினைத்தது ஒன்று;நடந்தது ஒன்று;
அதனாலே அலையுதே அம்மாக்கண்ணு!

சிந்தித்துச் செயலாற்றும் அறிவும் ஆற்றலும் படைத்த மானிடர்களின் எதிர்பார்ப்புக்களோ ஏராளம்; நிறைவு பெறுவதோ மிகச்சொற்பம்; ஏனையவை எல்லாம் ஏமாற்றம்!

''எதிர்பார்ப்பு'' என்ற சொல்லின் கருத்தைப் பல கோணங்களிலிருந்து நோக்குவோமாயின் பல்வேறு விதமான மக்களினதும் பல வயது வித்தியாசமான நிலையினரில், தனித்தும், ஒருமித்தும், மக்கள் எதனை மிகவும் ஆவலுடன் விரும்புகின்றனர் என்பதைக் கொண்டே கணிக்க வேண்டியுள்ளது.

எனவே, முதலில் ஒரு சிறு குழந்தையின் விருப்பு, வெறுப்புக்களை நமது கவனத்திற்கு எடுப்பது நலமாகும். குழந்தைப் பருவத்தின் ஆசைகளும், தேவைகளும் அதிகமல்ல வென்று நாம் கூறலாம். ஏனெனில்,அக் குழந்தைக்குத் தேவையான உணவு, உல்லாசம் முதலிய தேவைகளை அதன் பெற்றோர்,மூத்த சகோதரர்கள், உறவினர், உபகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிகள் அகியோர் கவனித்துக் கொள்வதால், அக்குழந்தை தனது சிறிய அறிவுக் கேற்றவாறு மன நிறைவை அடைகின்றது.

மனோதத்துவ நிபுணர்களின்[1] கணிப்பின்படி, ஒரு மனிதனின் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் அவனது மனதில் ஆழமாகப் பதிந்து விடுவதினால், அச்சம்பவங்களினால் ஏற்பட்ட குறை நிறைகள் அவனது பிற்கால வாழ்விலே பிரதிபலிக்கக் கூடியதாய் இருக்குமென்று அறிய வந்துள்ளது. சிலர் இவ் உண்மையைப் புரிந்து கொள்வதில்லை. வேறு சிலர் இதை உணர்ந்தும், அதற்கேற்ப குழந்தைகள் மட்டில் நடந்து கொள்வதில்லை. எனவே, ஒரு குழந்தையின் வாழ்வைப் பற்றிப் பல எதிர்பார்ப்புகளை அதன் பெற்றோர் கொண்டிருப்பதுடன் மட்டும்நின்று விடாது, அதற்கேற்றவாறு நல்ல முறையிலே அக் குழந்தை மட்டிலே செயலாற்றுவது மிகவும் அவசியம்.

அடுத்ததாக, ஒரு சிறுவனின் அல்லது சிறுமியின் எதிர்பார்ப்புகள் எவையென ஆராய்வது நலமாகும். துள்ளித்திரியும் பள்ளிப் பருவத்தில் உள்ள ஒரு சிறுவன் அல்லது சிறுமி தனது பெற்றோர், உறவினர் ஆகியோரின் அன்பையும், அனுதாபத்தையும் தன் வசப்படுத்த பல வகைகளில் எத்தனிப்பதை நாம் அவதானிக்க முடியும். இது ஒரு இயல்பான நிலை என்று நாம் கூறலாம். ஆயினும், சற்றுக் கவனத்துடன் அவதானித்தால், இது ஒரு சுயநலத்தின் பிரதிபலிப்பென்பதை நாம் உணர முடியும். ஒரு சிறுவன் அல்லது சிறுமி தன்னுடன் கூடிவிளையாடும் ஏனைய சிறுவர்களை முதலில் அழைத்து அணைத்தும் விளையாடுவதையும், சிறிது நேரத்தின்பின்னர் அச்சிறுவர்களைத் தவிர்த்து, தான் மட்டுமே தனியே விளையாடிக் கொண்டிருப்பதை அல்லது ஏனைய சிறுவர்களைப் பற்றி முறையிட்டு தனது பெற்றோரினதும், உறவினரதும் அன்பையும், அவதானத்தையும், அனுதாபத்தையும் தன்வசம் இழுக்க முயற்சி செய்வதையும் நாம் காணமுடியும்.

இத் தவறான போக்கைத் தக்க தருணங்களில் திருத்துவது, குறித்த சிறுவனின் அல்லது சிறுமியின் பெற்றோரினதும், பெரியோரினதும் தலையாய கடமையாகும். அன்றேல், அச் சிறுவன் அல்லது சிறுமி "சுயநலம்" என்னும் மனநோயினால் துன்புற நேரிடும். இது பிற்கால வாழ்விற்குப் பெரும் இடையூறாய் அமையும். இதில் கவலையீனமாயிருப்பின் குறித்த சிறுவன் அல்லது சிறுமியைப் பற்றிப் பெற்றோர்,பெரியோர் ஆகியோர் கட்டும் ஆகாயக் கோட்டைகள் எல்லாம் தவிடு பொடியாகும் நிலை நேரிடும். அப்படியான ஒரு அவலநிலை ஏற்பட நேர்ந்தால் குறித்த பெற்றோர், பெரியோரே தான் குற்றம் புரிந்தவர்கள் எனலாம். மேற்கூறிய சுயநலப் பாதையிலே வளர்ந்துவிட்ட ஓர் இளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞன் அல்லது யுவதியின் மன நிலையை உற்று நோக்கின், அவன்/அவள் மிகக் குறுகிய வட்டத்திற்குள்ளேயே வளர்ந்து விட்டதையும், அதன் காரணமாய் ஏனையோருடன் அன்புடனும் சமாதானத்துடனும் வாழ முடியாது தவிப்பதையும் நாம் காணமுடியும்.

இப்படிப்பட்ட இளைஞர்கள் தங்கள் சமுதாயத்துடன் சேர்ந்து வாழத் துடிப்பார்கள். ஆயினும், அது அவர்களுக்குக்'குதிரைக் கொம்பு' என்று தான் கூறவேண்டும். இவர்கள் வேகமாய் வளரும் பருவத்தில் இருப்பதனால் எத்தனையோ கற்பனைகளையும், மனக்கோட்டைகளையும் தமதாக்கிக் கொண்டிருப்பார்கள்; கனவுலகிலும் சஞ்சரிக்க விரும்புவார் கள். தாமாகவே தமது தேவைகளை உணர்ந்து அவற்றைத் தேடவும் முற்படுவார்கள். இவர்களுடைய சிந்தனைத் திறனையும், செயற்திறனையும் தக்க முறையில் வழிநடத்தினால், எத்தனையோ ஆக்கப் பணிகளைச் செய்து, தமக்கும், பிறரும் பயன்படக் கூடிய அருஞ்செயல்கள் புரிய அவர்களால் முடியும். இளைஞர்கள் இயற்கையாகவே ஏனையோரின் தலையீடுகளைத் தவிர்க்க முற்படுவார்கள். ஆயினும், அவர்களது எதிர்பார்ப்புகளையும் அபிலாசைகளையும் அறிந்து, அதற்கேற்ப செயலாற்றுவது மிகவும் அவசியம். இளைஞர்களின் சக்திகளையும் ஆற்றல்களையும் தக்க முறையிலே பயன்படுத்தினால் எத்தனையோ ஆக்கப் பணிகளைச் சாதிக்க முடியும்; அன்றேல் விபரீதமான விளைவுகளை எதிர்நோக்க நேரிடும். மனப்பக்குவம் இல்லாதவர்களினால் உயர்ந்த முடிவுகளை எடுப்பதென்பது சுலபமல்ல. அவற்றைச் செயற்படுத்துவதும் முயற்கொம்பாகிவிடும். இப்படியானவர்க்கு மனோதத்துவரீதியில் உதவியும், உபதேசமும் அவசியம் தேவை.

ஈற்றில், நமது சொந்த எதிர்பார்ப்புகள் எவையென்று சிந்தித்துச் செயலாற்றுவதுடன் நின்று விடாது, நம்மிடமிருந்து நமது பெற்றோர், பெரியோர், இனசனர், சமுதாய மக்கள் எதை எதிர்பார்க்கின்றனர் என்பதை நாம் உணர்ந்து, அதற்கேற்ப செயலாற்றுவது பல வகையிலும் சிறந்ததென்று துணிந்து கூற முடியும். ''உன்னைத் திருத்து உலகம் திருந்தும்'' நாம் ஒவ்வொருவரும் நமது குற்றங்களை உணர்ந்து திருந்தி நடந்தால், இந்த 'மானிட வாழ்வு பெரும் ஆனந்தம்' ஆகி, நாமும் மகிழ்ந்து, பிறரையும் மகிழ வைக்கலாம். ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' என்னும் கூற்றிற்கு இலக்கணம் வகுக்கும் முறையில் வாழ முயலுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளவியல் மதிப்பீடு

# எதிர்பார்ப்பு

கலாநிதி சபா ஜெயராசா

எதிர்பார்ப்புகள் எதிர்காலம் பற்றியதாக இருப்பினும் அவற்றின் வேர்கள் நிகழ்காலத்திற் காலூன்றி நிற்கின்றன. ஆகவே நிகழ்காலத்தில் நிதானமானதும், உறுதியானதுமான அடித்தளமிடல் எதிர்பார்ப்புக்களை வென்றெடுக்க உதவுகின்றன. எதிர்பார்ப்புகளை நேர் முகமாக வெற்றி கொள்ளக் கூட்டு முயற்சிகளே சிறந்த பயன் தரும். எதிர் பார்ப்பு தொடர்பான உளவியல் மதிப்பீடு ஒன்று இதோ தரப்படுகின்றது.

சரி / பிழை

1. எதிர்பார்ப்பு ஆக்கங்கள் எனது உள்ளத்தை உறுதிப்படுத்துவதால் மாத்திரம் தங்கியிருக்கவில்லை, சமூகப்பிணைப்புங் கொண்டது. [ ]

2. நல்ல உந்தியோகம், மகிழ்ச்சிதரும் குடும்ப வாழ்க்கை முழுமையான சீராக்கம் ஆகியவை சமூக அடித்தள நிருமானத்துடன் தொர்புபட்டிருக்கவில்லை என்பதை நிராகரிக்கவேண்டியுள்ளது. [ ]

3. விழா ஒன்றுற்கு நான் செல்லவிருக்கிறேன். எனக்குரிய உபசாரம் ஒழுங்கான முறையிலே தரப்படாவிட்டால் அதற்குரிய தவறினை நான் என் மீதுமட்டும் சுமத்தி விட முடியாது. [ ]

4. பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்காது நழுவிச் சென்று ஒதுங்கித்தப்பிக் கொள்ளுவதிலும் அவற்றை எதிர் கொண்டு இடர்களை ஏற்பது நல்லது. [ ]

5. பிறரின் ஒத்துழைப்பு இன்றித் தன்னந்தனியா முயற்சி மேற்கொள்வதே சிறந்தது. [ ]

6. முதுமைக் காலம் எப்பொழுதும் நோய் நிரம்பியதாகவும், சோகம் நிரம்பியதாகவும், தன்னந் தனிமையானதாகவும் இருக்கும். [ ]

7. எதனையும் ஆழமா ஒரு முறையே முயற்சிக்க வேண்டும் கை கூடா விட்டாற் கைவிட்டு விடுதல் வேண்டும். [ ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சமூகத்தில் ஒரு சிலரே நேர்மையுள்ளவர்களாகக் காணப்படுவார்கள். [ ]

9. துன்பம் ஏற்படும் பொழுது அதிலிருந்து மீட்சி பெற மதுவும் போதை வஸ்துக்களும் துணை செய்யும். [ ]

10. எமது எதிர்கால முன்னேற்றத்துக்குரிய நிகழ்ச்சித் திட்டம் அவசியமில்லை. சந்தர்ப்பத்திற் கேற்ப அவ்வப்போது சமாளித்துக் கொள்வதே போதுமானது. [ ]

1—5 வரை = சரி

6—10 வரை = பிழை.

ஒவ்வொன்றுக்கும் 10 புள்ளிகள்.

40—50 புள்ளிகள்— எதிர்பார்ப்பு பற்றிய நம்பிக்கையுடையவர்கள்

60—80 புள்ளிகள்— எதிர்காலம் பற்றிய மிகவும் நம்பிக்கையுடையவர்கள்

90—100 புள்ளிகள் எதிர்காலம் பற்றிய நம்பிக்கைகளின் தாரகைகள்.


## "நான்" கண்ட "மல்லிகை"

இறக்குமதி சஞ்சிகைகளுக்கு சளைத்ததல்ல ஈழத்து சஞ்சிகை என்பதனை நிலைநிறுத்தியதோடு பல இலக்கிய நெஞ்சங்கள் மல்லிகை பந்தலில் மனம் திறந்துபேச அரங்கமைத்து தனது 21வது வாலிபவயதில் புதிய பல கருத்துக் குவியல்களை தாங்கி வெளிவருவது கண்டு மகிழ்வடைகின்றோம்.

"நான் என்ற ஆணவம் அல்ல நான் என்ற ஆளுமையின் வளர்ச்சி வளர வேண்டும்" என்ற ஆவல் ஆசிரியர் டோமினிக் ஜீவா அவர்கள் தனிமனித முயற்சி சொல்லால் அல்ல செயலால் காட்டி நல்ல பல கருத்துக்களை எழுத்துலக முன்னோடிகளின் மத்தியில் முன்வைத்தார். மல்லிகையின் வளர்ச்சிப் பணியில் பட்டதுயர் விட்டகன்று தனக்கென்றோர் தனித்துவத்தோடு தன்னைத்தானே தயார்படுத்தும் வளர்ச்சிப் பணியின் மகிழ்ச்சியில் திளைத்து நிற்கும் ஆசிரியருக்கும் அதனை சூழ்ந்த எழுத்துலக நண்பர்கள் வாசகர்கட்கும் மேலும் பல்லாண்டு நற்பணி வளர்ச்சியுற வாழ்த்தி மகிழ்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி இல: 24




**குழம்பி வருபவை —>13—> 21 → 27 → 35**

**↓6 ↓9 ↓30**

**மேலிருந்து கீழ்.**

7. மாமியார் எதிர்பாராதது மணவாளன் எதிர்பார்ப்பது.
9. இந்தப் பேதம் இல்லையெனில் சுவர்க்கம் தான்.
2. இராசிகளில் ஒன்று (இறுதி எழுத்து விடப்பட்டுள்ளது)
4. தாய்மையைக் கூட தவருகக் கூறுவர் இது நிறைவேருவிட்டால்.
23. உலக அதிசயத்தில் தன் பெயரை இதனுல் சீனு நிலைக்க வைத்தது
6. இறந்த பின் கூறுவதும், நடுநிலை வகிப்பதும்.
30. பலரது குரலை பரவலாக்க உதவுவது.

**இடமிருந்து வலம்.**

4. இது இருந்தால் முன்னேற்றமுண்டு.
7. ஆண்டுக்கொருமுறை வரும்.
13. அன்று நாடு ஆண்டவன் பெற்ற பெயர், இன்று நாடு அற்றவனும் பெறுகிருன்.
21. சிலதை ரசிக்கலாம். சிலதை சகிக்கமுடியாது.
27. இப்பக்கம் பல துக்கம் நடந்த இடம்.
32. வெளிநாட்டால் இதுவந்தால் மகிழ்ச்சி.
உள்நாட்டில் இது பண்ணிஞல் கலக்கம்.
[இரண்டு கருத்துப்படும் அது ஆங்கில பதம்]
35. பல தூரம் சென்று[illegible]டும் கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[ பாராட்டுக் கவிதை ]

# எதிர்பார்ப்புகள்

— என். சி. அருள்வரதன் —

கருவறையின் காலம் முதல்
கல்லறையின் காலம் வரை
இரு அறையின்
இடைவெளியில்
இருப்பதெல்லாம் எதிர்பார்ப்பு......

குருதிக் கடலோடிக்
கொடுமைகளைக்
கண்டு இங்கு
விரண்டு ஓடி எங்கோ
வாழ்வதற்கு மிடமின்றி
திரண்டு சென்றோர் மனதில்
மீண்டும்
சொந்த மண்ணில் சென்றங்கு
சுதந்திரமாய் வாழ்வதற்காய்
தன்மான உணர்வோடு
தரமான எதிர்பார்ப்பு......

பெண்மையின் பெருமைகளைப்
பெறுமதியைத் தெரியாத
புல்லர்களின்
கொடும் பழியால்
புலம்பியழும் பெண்களுண்டாம்
இன்னலிந்த நிலை நீங்கி
இன்பமுடன் வாழ்வதற்கு
பெண்ணவளின் மனத்தடியில்
பெருமூச்சோ டெதிர்பார்ப்பு......

சீதனங்கள் சீர்வரிசை
ஆதனங்கள் எதும் வேண்டாம்
என்றுரைக்க
நீதியுள்ள ஆண்களிந்த
நித்திலத்தி லுண்டு என்றால்
போதும் நாங்கள்
புலம்பமாட்டோம்
என்று எண்ணி
வாழும் பெண்கள்
வாழ்விலிதுவும் எதிர்பார்ப்பு......

சிறைக் கதவே திறந்துவிடு
எங்கள்
சித்திரங்கள் சிதையுமுன்னே
பழியறியாப் பாலகர்கள்
படுகின்ற துயரம் போதும்
என்று எண்ணி ஏங்குகின்ற
அன்னையரின் உள்ளமெல்லாம்
அணைகடந்த எதிர்பார்ப்பு......

சென்றுவிட்ட ஆண்டுகளில்
செங்குருதி கண்ட பூமி
மனிதப்
பண்புகளை விற்று இன்று
படுநட்டம் கண்டதுண்மை
என்றும்
இன்பத்தில் நிலைத்து மக்கள்
இதயத்தில் மகிழ்ச்சி பொங்க
வருகின்ற ஆண்டெமக்கு
வளமாக அமைய வேண்டி
உள்ளங்கள் பலவற்றின்
உருக்கமான எதிர்பார்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்க்கையில் பிறப்பதே வெற்றி

— செல்வி. எஸ். பீ. வைலற் சரோஜா, B. Com —
திருகோணமலை.

**தங்கம் தகதகக்க தணல் ஒன்று தேவை**
**வைரம் யொலித்திட சாணே ஒன்று தேவை**
**மனிதன் மனிதனுக குறிக்கோள் ஒன்று தேவை**

குறிக்கோள் அற்ற மனித வாழ்க்கை காரமற்ற உப்பாக சாக்கடையிலே கொட்டப்படும். எதிர்பார்க்கையின் அடிப்படையில் மலர்வதுதான் குறிக்கோள். நான் ஒரு எழுத்தாளனுக வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது நாளாவட்டத்தில் குறிக்கோளாகவே மாறிவிடும். நான் ஒரு வைத்தியனுக வருவேன், நான் ஒரு பட்டதாரியாக வருவேன் என் எதிர்பார்ப்பது நாட்செல்லச் செல்ல, குறிக்கோளாக மலர்ந்து மணம் பரப்பத் தொடங்குகின்றது. இந்த எதிர்பார்க்கை, ஊக்கத்தையும் உறசாகத்தையும் ஊட்ட உயர்ச்சியில் உதயமாவதே வெற்றி.

எதிர்பார்க்கைகள் பலவிதம்; ஆனுல் ஒவ்வொன்றும் ஒருவிதம். மனிதன் தான் வாழும் சூழல், சமூகம், நாட்டு நாகரீகம், பொருளாதாரம் இவற்றின் அடிப்படையிலேயே எதிர்பார்க்கைகள் ஆரம்பமாகின்றன. வெறும் ஆசைவழி அதிஷ்டத்தை மட்டும் நம்பி உருவாகும் எதிர்பார்க்கைகள் தோல்வியையே தழுவிக் கொள்கின்றன.

''குருவியாகப் பிறந்தால் கூடுதான் கட்ட முடியும். மாளுக் கோபுரம் அமைக்க முடியுமா?'' இது நிறைவேருத வெறும் ஆசை அலைகள் மட்டுமே ஒழிய முழு வெற்றி அல்ல. கனவில் இதைக் காணலாமே அல்லாது நிஜவாழ்க்கையில் காண முடியுமா? முட்டாள்தனமல்லவா?

எதிர்பார்க்கைகள் நியாயமானதாக அமையவேண்டும். இல்லாதவிடத்து ஏமாற்றத்தால் மனம் உடைந்து விரக்தியின் உச்சக்கட்டத்தை அடைந்து உயிரைப் போக்கும் நிலைகூட உருவாகலாம்.

ஒரு ஏழையான அழகிய பெண் தனது அழகில் நம்பிக்கை வைத்து ஒரு பணக்கார, படித்த, அழகான, குறைகள் எதுவுமே இல்லாத வாலிபன் தனது கணவனுக அமைய வேண்டுமென எதிர்பார்க்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுதான் காணமுடியும். இவ்வாறு அர்த்தமற்ற எதிர்பார்க்கையால் மிஞ்சுவது மனவிரக்தி, நிம்மதி இன்மை, ஏக்கம் போன்றவையே. இவ்வாறான எதிர்பார்க்கையால் அப்பெண் தனக்குப் பேசப்படும் திருமணங்களை எல்லாம் வேண்டாம் என்றே கூறுவாள். காரணம் சகல இலட்சணங்களுடன் ஒரு ஆண் அழகனைத் தேடுவது கடினம். முடிவு, வயது ஏற கன்னியாகவே காலட் கழிக்க வழிகோலுமல்லவா? மாறாக, இலட்சியக் கணவனைத் தனது தகுதிக்குத் தகுந்தவாறு எதிர்பார்த்திருந்தால், திருப்தியான வாழ்க்கை அமைந்திருக்குமல்லவா?

எதிர்பார்க்கைகள் எப்போதும் உனது திறமையை, சக்தியை, முயற்சியை நம்பியே எதிர்பார்க்கப்படவேண்டும். அன்று ஒரு காரியாலயத்தில், சாதாரண பியோனாகக் கடமைபுரிந்த ஒருவன், தன் திறமைமீது நம்பிக்கை கொண்டு தான் ஒரு எழுத்தாளனாக வருவானென எதிர்பார்த்து காரியாலயத்தை விட்டு வெளியேறினான். முயன்றான். முதற்படி தோல்வியானதைக் கண்டு அஞ்சவில்லை. அயராது அரும்பாடு பட்டான். அவனது எதிர்பார்க்கை நிறைவேறியது. அவன்தான் உலகப் பிரசித்தி பெற்ற அறிஞனும் எழுத்தாளனுமான பேனுட்சா. எதிர்பார்க்கையே முயற்சிக்கும், முன்னேற்றத்திற்கும் ஊக்கத்தை வழங்கி, உயர்ச்சியை அளிக்கும். அது என்னால் செய்யக்கூடிய காரியமா? என்ற நம்பிக்கை அற்ற எதிர்பார்க்கையால் முயற்சி அற்றவர்களாக எத்தனையோ பேர் ஆற்றல் அற்றவர்களாக, மூலை முடுக்குகளில் சோம்பேறிகளாக காலம் கழித்து வறுமையின் கெடுபிடியில் சிக்கித் தவித்து, அடிமைகளாக அடங்கி வாழ்ந்து துயரத்திலே, நிம்மதி இழந்து, அலைமோதி அடங்குகின்றார்கள்.

மாறாக அடிமைத் தளைகளை அறுத்தெறிந்து நாமும் முன்னேற முடியும் என்று தன்னம்பிக்கையுடன் எதிர்பாருங்கள். வெற்றி நிச்சயம் உங்கள் பக்கம்தான். நான் ஒரு முட்டாள், என்னால் இது முடியாது எனத் தட்டிக்கழித்து குட்டிச் சுவராகாது, என்னால் முடியாதது ஒன்றில்லை. ''உன்னை நீ நம்பு — இமயத்தையும் பெயர்க்கலாம்'' என்று உனக்கு நீயே உறுதி கூறு; முயற்சி செய். தோல்வியைக் கண்டு அஞ்சாதே. அது உன்னை மிஞ்சிவிடும். தோல்வியைத் தோற்கடிக்க, மீண்டும்மீண்டும் முயற்சி செய்து எதிர்பார்த்திரு. நிச்சயம் வெற்றி உன் கையில் உறவாடும்.

★★★★★

**தவறுதலுக்கு வருந்துகின்றோம்**

இறுதி இதழின் பக்கம் 3 வரி 11

ருஷ்யாவின் தலைவராகத் திகழ்ந்த லெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுப் பெட்டகம்

— தொகுப்பு : **ஜஸ்ரின் சுரேன்** —

1. தற்பொழுது அமெரிக்க விஞ்ஞானிகள் "செயற்கை இரத்தத்தை" எம்மூலப் பொருளிலிருந்து தயாரிக்கின்றார்கள்?
ப்ளூரோ கார்பன் எமல்சன்.

2. ஓர் உலர் மின்கலத்தின் மின்பகுபொருள் யாது?
அமோனியம் குளோரைட்டு.

3. உதைபந்தாட்டத்தில் உலக வெற்றிக் கிண்ணப் போட்டிகள் முதலிலும், இறுதியாகவும் நடைபெற்ற ஆண்டுகள் எவை?
1930, 1982.

4. அமெரிக்க விண்வெளித் தளம் எது?
நாசா (**NASA**).

5. பூமியில் 3 அடி பாய்பவன் பூமிக்குரிய சந்திரனில் எத்தனை அடி பாய்வான்?
18 அடி.

6. "வயர்லெஸ்" (**Wireless**) ஐக் கண்டுபிடித்தவர் யார்?
1895 ல் இத்தாலியைச் சேர்ந்த மார்க்கோனி.

7. உலகில் மிகப்பெரிய வைரம் யாது?
கலினன் — 3106 கரட்.

8. ஜேர்மனியப் பாராளுமன்றம் எவ்வாறு அழைக்கப்படும்?
றெயிஸ்ராக் (**Reichstag**).

9. ஜேர்மனி சரணடைதல், ஹிட்லரின் மறைவு, ஐ. நா. சபை உதயம் ஆகியன எந்த ஆண்டில் நடைபெற்றன?
1945 ம் ஆண்டு.

10. உலகின் உயரமான நீர் வீழ்ச்சி எது?
ஏன்ஜன்ஸ் நீர் வீழ்ச்சி — 3212 அடி (வெனிசுலாவில்)

11. உலகிலுள்ள பெரிய குடாநாடு எது? பரப்பளவு என்ன?
அரேபியா — 25 மில்லியன் சதுர மைல்.

12. "மோட்டார் கார்களின் நகரம்" எனப் புனையியற் பட்டப்பெயர் பெற்ற நகரம் எது?
அமெரிக்காவிலுள்ள "டிற்றோயிட் நகரம்".

13. மிகவும் சிறிய, பின்பக்கமாகப் பறக்கக்கூடிய பறவை எது?
ஹங்காரப் பறவை (**Humming Bird**)

14. ரூபா சத நாணய முறை இலங்கையில் எப்போது ஏற்பட்டது?
1872 ல் ஜனவரி 1 ல்.

15. ஐ. நா. சபையின் கொடியின் வர்ணம் எது?
மங்கலான நீலமும் வெள்ளையும்.

16. இலங்கையில் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டது எப்போது?
1–12–1960 ல்.

17. உலகில் நிலக்கரி விளையும் 4 முக்கிய இடங்கள் எவை?
பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, அமெரிக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி. ஈ. ஸ்பியர்மன்

## C. E. SPEARMAN (1863 - 1943)

இ. பாலாம்பிகை, B. A.
இரத்தினபுரி.

இவர் ஒரு பிரிட்டிஷ் உளவியலாளராவர். இவர் லண்டன் பல்கலைக் கழகத்து உளவியல் துறையுடன் தொடர்பினை உடையவர். இவர் நுண்ணறிவுச் சோதனை முறிவுகளின் பகுப்பாய்வுக்குப் புள்ளியியல் பயன்படுத்தலை பெருமளவு மேற்கொண்டார். இப்பணியின் மூலம் நுண்ணறிவின் தன்மையை விவரிக்க இரு காரணிக் கொள்கை என்னும் கொள்கையினை வெளியிட்டார்.

உளவியல் கொள்கைகள் பற்றிய பெரும் சர்ச்சைகளில் உள்ளடங்காத மற்றொரு கொள்கையும் இவரின் பணியுடன் தொடர்புடையதாகும். இவர் நுண்ணறிவின் காரணிகளை ஆய்வதற்கு ஒரு புள்ளியியல் முறை மூலம் அணுகுதலையே மேற்கொள்ள விரும்பினர். இதன் காரணமாகத்தான் இக்கொள்கை பொதுவாக ''காரணிக்கொள்கை'' எனப்படுகிறது. இவரது பெரும் தொண்டு நுண்ணறிவின் தன்மையினையும், நம் அறிவு வாழ்க்கையில் நுண்ணறிவு இயங்கும் வழிகளை அறிந்து கொள்ளவும் நமக்கு உதவுவதாகும். இப்போது பயன்படுத்திவரும் நுண்ணறிவுச் சோதனைகளின் தன்மையினை அவரது பணி பெருமளவு சிறப்புமிக்கதாகச் செய்தது. நுண்ணறிவுக் காரணிகள் பற்றிய ஆய்வுத்துறையில் இவரது பணி பெருமளவில் உதவி செய்துள்ளது.

ஒவ்வொருவரிடமும் இயற்கையிலேயே காணப்படும் நுண்ணறிவை உளவியல் வல்லுனர்கள் பலர் பலவகைகளில் பொருள் வரையறை செய்ய முயன்றுள்ளனர்.

வாழ்வின் சுயமுயற்சியால் பெறும் கேள்வியறிவு, நூலறிவு, அனுபவ அறிவு ஆகிய மூவகையறிவையும் புதுப்புது சூழ்நிலைகளில் வெற்றியுடன் கையாளும் திறனே நுண்ணறிவாகும். இப்படிப் பலவகையான பொருள் வரையறைகளைக் கவனிக்குமிடத்து சோதனை முடிவுகளைப் புள்ளியியல் அடிப்படையில் ஸ்பியர்மன் என்பவரே செய்து காட்டினர். நுண்ணறிவென்பது ஓர் அடிப்படையான துவக்கத்தினுல் அன்றி வெவ்வேறு திறமைக் கூறுகளின் பல்கூற்றுத் தொகுதியின் திறனு? என்ற சுவையான பிரச்சினை உளவியலில் எழுந்ததும் நுண்ணறிவின் திறமைக் கூறுகளை ஆராயும் பணி மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு ஆராய முற்பட்டவிடத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனை முடிவுகளை புள்ளியியல் அடிப்படையில் பரவலாகப் பகுப்பாய்வு செய்து திறமைக் கூறுகளுக்கிடையேயுள்ள உடன் தொடர்பை, ஆங்கிலேயப் புள்ளியியல் நிபுணரான இவர் நிலைநாட்டினார். அவருடைய ஆராய்ச்சியின் முடிவே 1904இல் வெளியிடப்பட்ட ஈராற்றல் கொள்கை (**Two Factor Theory**) ஆகும்.

இக்கொள்கைப்படி ஒவ்வொரு மனிதனிடமும் பொதுத்திறன் (**General Ability**), தனித்திறன் (**Special Ability**) என இரு ஆற்றல்களுண்டு. இவை இரண்டையும் பொறுத்து ஒருவரின் நுண்ணறிவு அமையுமென்பதே ஸ்பியர்மனின் சித்தாந்தம்.

---

# இது ஒரு அறிவு சம்பத்தே !

அறிவுக்கு வெளிச்சம் தரக்கூடிய எல்லா வழிகளிலும் எமக்கு உடன்பாடே. இதில் சமயச் சார்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. வாழ்க்கையின் ஓட்டம், குறிக்கோளற்ற மயக்கமாகவே இருக்கிறது. இதைத் தெளிவுபடுத்த வேண்டிய உன்னதமான கடமை, அறிவுள்ள எல்லோருக்குமே உண்டு. இதை விடுத்து, வீண் சர்ச்சையிலேயே பொழுது கழியுமானால், விளைவுகள் பாதகமானதாகவே இருக்கும்.

இதை தவிர்த்துக் கொண்டிருக்கிற, நன்மையே நாடும், உயர்ந்த இலட்சியவாதிகளுக்கு எல்லாம் வெற்றியே. ஓர் உளச்சார்பான அறிவியல் நூலுக்கு, சமய மகுடம் சூட்டுவதை எந்தவகையிலும் என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. அது என் பெற்ற தாயையே அவமானப்படுத்துகிற மாதிரி இருக்கிறது. ஆன்ம ஞானத்தில் ஒருவனைப் பூரணப்படுத்துவதற்கு அறிவும் வேண்டும் அல்லவா — அது இந்த வழியில் வரக்கூடுமானால் ஏற்றுக்கொள்வதில் என்ன தடை ?

— **ஆனந்தி**

---

- வாழ்வுக்கோர் பொருளுண்டு; அதைக் காண்பதே நான் உண்ணும் உணவும் பருகும் பானமுமாகும்.

— **ராபர்ட் பிரௌனிங்**

- என் தோல்வியை விட, என் ஆதிக்கத்தின் மாட்சியைவிட, நன்மை எது, தீமை எது என்று பகுத்துணரும் அறிவே மேம்பட்டது.

— **அலெக்சாந்தர்**

- ''சிந்தனைகள்தாம் நம்முடையவை... அவற்றின் விளைவுகள் நம் பொறுப்பில் இல்லை !''

— **ஷேக்ஸ்பியர்**

தொகுப்பு : **பிறெட்றிக் தேவராஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருத்துக் ★★★★★★ ★★★★ குவியல் - 40

**எதிர்பார்ப்புகளே எதிர்கால வளர்ச்சிக்கு உரம் !**

''ஆசையின் வித்து மனதில் முளைக்கும்போதே அந்த ஆசையை அடைவதற்கான பூரண திறமையும் வாய்ப்பும் அந்த ஜீவனிடம் இருக்கிறது என்பதே பொருள்'' என்கிருர் எமர்சன். ஆம் ஆசையின் வித்து அது தான் எதிர்பார்ப்பு. முதலில் எதையும் எதிர்பார்க்கக் கற்றுக்கொள்வோம். அந்த எதிர்பார்ப்பின் உந்துதலால் செயல் வீரர் ஆவோம். அந்தச் செயல் வீரம் நாமே எதிர்பார்த்திராத அளவிற்கு உயர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்வதை உணர்வோம்.

வாழ்க்கையில் இருந்து நாம் எதைக் கேட்கிருேமோ அதைத்தான் அது எமக்குத் தரும். செயல்களின் முதற்படி எண்ணந்தான் எண்ணியதைத்தான் செயல்படுத்த முடியும். ஒரு மனிதன் என்ன நினைக்கிருனே அதுவாகவே அவன் ஆகிவிடுகிருன் என்பது ஒரு ஆங்கிலக் கவி வாசகம். முடியாது என அவ நம்பிக்கைப்படுபவன் எந்தக் காரியத்தையும் சாதித்ததாகச் சரித்திரமில்லை.

சாதாரண ஏழைக் குமாஸ்தாவாக இருந்தார் ஜோர்ச் பேர்ளுட்ஷா, என் வாழ்க்கை இப்படியே முடிவதா? நான் வியத்தகு செயல் வீரனுக வேண்டும் என அவர் எதிர்பார்த்தார். அந்த எதிர்பார்ப்பின் உந்துதலால் ஒன்பது வருடங்கள் தன் முயற்சிக்குப் பயன் கிடைக்காதபோதும் துவண்டு விடாமல், எழுதினுர், எழுதிக்கொண்டே இருந்தார். இன்று தலை சிறந்த எழுத்தாளர் எனப் போற்றப்படுகிருர். ஆம், அவர் எதிர்பார்த்தார்; முடியும் என நம்பினுர்; செயல்பட்டார்; வெற்றி கண்டார்.

இந்தியாவை இந்தியரே ஆழவேண்டும் என எதிர்பார்த்தார். காந்திஜி இந்தக் கிழவன் இந்தியாவை மீட்பதா? என்று வெள்ளையர் கூட்டம் கை கொட்டிச் சிரித்தது. தேசிய வாதிகள் இவ்வளவு பரந்த பாரத மக்களை ஒன்றிணைத்துப் போராடுவது கடினம் என கருத்துத் தெரிவித்தனர். இதனுல் அவரது எதிர்பார்ப்பு மங்கிவிடாமல் வீறு கொண்டது. சுதந்திர பாரதம் மலர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர்களின் வாழ்க்கைப் போராட்டங்கள் எமக்கு ஆச்சரியமாக இருக்கின்றன. போராட்டமான வாழ்க்கையின் முடிவுதான் வெற்றியாக இருக்கும். வெற்றியால் திருப்தியோ, தோல்வியால் துவழ்வோ அடையாமல் தொடர்ந்து எதிர்பார்த்து முயற்சிப்போம். எதிர்காலத்தை வெற்றி கொள்வோம்.

உள்ளத்தனையதே உயர்வு. எனவே உள்ளத்தின் எதிர்பார்ப்புகள் நல்லவையாய், உயர்ந்தவையாய் இருக்க வேண்டும். இதனால் வாழ்வு உயரும்; சாதனைகள் மலரும்; வெற்றி இருகரம் நீட்டி வரவேற்கும். ஒரு வெற்றியாளனைப் பொறுத்தவரை எதிர்பார்ப்புகளால் அவன் இயங்கிக் கொண்டே இருப்பவனாகக் காணப்படுவான்.

எனவே, எமது எதிர்கால வளர்ச்சி எமது எதிர்பார்ப்புகளிலேயே தங்கியுள்ளது.

— நா. விமலாம்பிகை

**இலட்சியமில்லா வாழ்க்கை மகிழ்ச்சி இல்லாததே!**

மனிதனுக்கும் ஏனைய படைப்புக்களுக்கும் உள்ள முக்கியமான வேறுபாடு, மனிதன் இலட்சியத்தினால் வழிநடத்தப் படுகின்றவன் என்பதே. உண்ணுவதும் உறங்குவதும் இனவிருத்தி செய்வதுமே மனிதனுடைய வாழ்க்கையாக இருக்குமானால், மனிதனுக்கும் விலங்குக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். இலட்சியத்தை நிலைநாட்டி மகிழ்ச்சி அடைவதற்கென்றே, மனிதனுக்கு இளமையும் பலமும் அளிக்கப்பட்டிருக்கின்றது.

நமது இலட்சியம் உயர்ந்த எல்லைக்கோட்டை உடையதாக இருக்க வேண்டும். அந்த இலட்சியத்தினால் சமுதாயம் பயன் பெற வேண்டும். இலட்சியம் உயர்ந்ததாக இருந்தால்தான், அந்த இலட்சியம் பூரண வெற்றி பெறாவிட்டாலும் கூட, வெற்றி பெற்ற அளவில் வாழ்க்கை பொருள் உடையதாகவும் மகிழ்ச்சி உடையதாகவும் இருக்கும். குறுகிய இலட்சியத்தைக் கொண்டிருந்தால் அதில் முழு வெற்றி பெற்றால்கூட வாழ்க்கையில் சிறப்போ, உயர்வோ, மகிழ்வோ ஏற்பட முடியாது. நமக்கென்று வகுத்துக்கொண்ட உயர்ந்த இலட்சியத்தின் அடிப்படையில் வாழ்க்கை நடத்தும்போது நம் வாழ்நாளின் ஒவ்வொரு வினாடியும் உற்சாகமும் மகிழ்ச்சியும் உடையதாய் இருக்கும். ஒரு இலட்சியத்திற்காக வாழ்நாளை அர்ப்பணித்து, அதற்காக கஷ்டங்களை ஏற்றுக்கொண்டு, துயரங்களை அனுபவித்து, அந்த இலட்சியத்திற்காக உயிர் துறக்கவும் ஆயத்தமாக இருப்பதுதான் அர்த்தமுள்ள மகிழ்ச்சியான வாழ்வு. அப்படிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட இலட்சிய வாழ்வு வாழ்ந்தவர்கள்தான் நம் மத்தியில் இறந்தும் இறவாமல் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அந்த இலட்சிய வாதிகளின் நினைவுகள் உற்சாகத்துக்கும் மகிழ்வுக்கும் உரியனவாய் நம் மிடையே உலாவருகின்றன.

— ஜெயபாலாஜி
முருங்கன்

**உயர்ச்சியின் வளர்ச்சி எதிர்பார்ப்புக்களே !**

எதிர்பார்ப்பே! எதிர்பார்ப்பே! — உன்
எதிர்பார்ப்பை முன்னிட்டு ஏங்குகின்றனர் சிலர்.
எதிர்பார்த்தேன்! எதிர்பார்த்தேன்! — ஆனால்
அது கிடைக்கவில்லை என்று வாடுகின்றனர் பலர்.
எதிர்காலத்தை நம்பி வாழ்கிறவர்களுக்கு — தம்
கனவுகள் பலிப்பதேயில்லை.
இறந்த காலத்தை நினைத்துக் கவலைப்படுகிறவர்களுக்கு — அந்த
சென்ற நேரம் திரும்பி வருவதேயில்லை.
நிகழ்காலத்தை ரசித்து எதிர்பார்ப்பவர்களுக்கு — அந்த
''எதிர்பார்ப்பு வெற்றி'' நிச்சயம் கிடைக்கும்.
வாழ்க்கையில் நோக்குடைய ஒன்றை எதிர்பார்ப்பவர்கள் — தம்
வாழ்வை ரசித்துச் சுவைக்கிறார்கள்.
வாழ்க்கையில் நோக்கான குறிக்கோளை அடைய — அந்த
எதிர்பார்ப்பு முயற்சியே சிறந்தது.
எதிர்பார்த்து கிடைக்காமல் போனால் — அந்த
எதிர்பார்ப்பு கிடைக்காது என்று நினைக்க வேண்டாம்.
எதிர்பார்த்தது கிடைக்காவிட்டால் — அந்த
எதிர்பார்ப்பு முயற்சியை இடைநிறுத்தாதீர்கள்.
வாழ்வின் குறிக்கோளை அடைய வேண்டுமென்றால் — அந்த
எதிர்பார்ப்பு முயற்சியைத் தொடருங்கள்.
எதிர்பார்ப்பால் பலனை அடையுங்கள்.
வாழ்வின் குறிக்கோளை நிறைவாகப் பெறுவீர்கள்.
தோல்வியென்றால் மறுமுறை எதிர்பாருங்கள்.
அந்த எதிர்பார்ப்புக் குறிக்கோளை அடைவீர்கள்,

**தேவிகா தங்கநாதன்**
யாழ்ப்பாணம்.

**எதிர்பார்ப்புகளின் பிறப்பிடம் மனித மனமே......**

மனித முன்னேற்றத்திற்கு நல்ல எதிர்பார்ப்புகள் இன்றியமையாதவை. இலட்சியமில்லா வாழ்க்கையால் எதுவித முன்னேற்றமும் இல்லை. ''நீ வானத்தைப் பார்த்து நடந்தால்தான் தென்னையின் உயரத்தையாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவாய்'' என கூறுவர். உயர்ந்த லட்சியங்கள் மனித முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவை. சிறந்த எதிர்பார்ப்புகளை நாம் அடைய வேண்டுமாயின் — நாம் எதை எதிர்பார்க்கின்றோமோ அந்த இலட்சியங்களைக் கடைப்பிடித்த மனிதர்களின் வாழ்க்கையைப் பின்பற்றி நடக்க முயலவேண்டும். எமக்கென ஒரு குறிக்கோள் இருந்தால்தான் எமது எதிர்பார்ப்பு நிறைவேறும். எமது எதிர்பார்ப்புகள் — முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போன்றிராது எம்மால் நிறைவேற்றக்கூடியவையாக இருக்கவேண்டும்.

எதிர்பார்ப்புக்களின் பிறப்பிடம் மனித மனமே......... இந்த மனித மனத்தில் ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு வித்தியாசமான எதிர்பார்ப்புகள் தோன்றலாம். ஒருவரின் உன்னத எதிர்பார்ப்பு மற்றவருக்கு சாதாரணமானதாகத் தோன்றலாம். எதிர்பார்ப்புகள் வெற்றியில் முடியலாம், தோல்வியில் முடியலாம். தோல்விகளைக் கண்டு கலங்கும் நெஞ்சம் ஏற்படாதவாறு மனத்தைத் திடமாகவைக்க முயற்சிக்க வேண்டும். எதிர்பார்ப்புகளில் வரும் தோல்விகளும் துன்பங்களுமே மனிதனை மனிதனாக்குகின்றன. தொடர்ந்து முயற்சி செய்வதால் வெற்றி நிச்சயம் என்ற மனநிலையுள்ளவர்களாய் நாம் மாறவேண்டும். எதிர்பார்ப்புகள், கற்பனைகள் ஏமாற்றங்களாக மாறும்போது மனித மனதில் ஏற்படும் விரக்தியினை சொல்லிவிடமுடியாது. பலவீனமான உள்ளங்கள் தங்களை மாய்த்துக் கொள்ளும் நிலைக்கு வந்துவிடலாம். கனவுகள் கலையலாம். எதிர்பார்ப்புகள் சிதையலாம். உயிரிற் கலந்த உறவுகள் அழியலாம். எனினும் எதையும் தாங்கும் இதயத்தோடு,

எங்கள் நிலத்தில்,
எங்கள் பலத்தில்.
எங்கள் கால்களில்,
தங்கி நிற்க முயலுவோம்.

**ரேணுகா யோகராஜா**

---

**பாராட்டுப் பெறுவோர்:**

அனிதா அன்புராஜா, பற்றீஷியா பீரிஸ், கமலி ஆள்வான்
— யாழ்ப்பாணம்

ஜேயரேஸ் யோசவ் — பெரியவிளான்

ஜேக்கப் ஜெயந்தி, சாந்தி, செல்ஸ்ரீனு — நெடுந்தீவு

சாள்ஸ் ரதி — புங்கையூர்

வைலற் மத்தியூஸ் — இராமநாதபுரம்

சி. தனேஸ்வரி — மல்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையும் கலைரசனையும்

கலாநிதி. சோ. கிருஸ்ணராஜா

கலையானது மனித வாழ்வில் முக்கியமான ஒரு அம்சமாகும். எந்தப் பண்பாட்டிலும் கலை என்பது தவிர்க்கமுடியாத அம்சமாக விளங்குகின்றது. ஆனால் கலை என்றால் என்ன என்பது பற்றி எழுத்தாளர்களிடையேகூட கருத்துத் தெளிவில்லாத ஒரு நிலையை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. ஓவியம், சிற்பம், நடனம், இசை, நாடகம், கலை இலக்கியம் என்பன கலைப் படைப்புகள் எனக் கருதப்படுகின்றன.

கலைப் படைப்பு எது என்பதை நாம் வேறுபடுத்தல் மூலம் காணலாம். இயற்கைப் பொருளை நாம் கலைப்பொருள் எனக் கொள்வதில்லை. அது மட்டுமல்ல மனித உழைப்பினால் உருவாக்கப்பட்ட அனைத்தையும் கலைப் பொருளாகக் கொள்ளவும் முடியாது. ஆனால் கலைப் படைப்பில் மனித உழைப்பு அவசியமான ஒன்றுதான். அனுபவம் என்பது கலைக்குரிய முக்கிய அம்சமாகும். அனுபவமின்றிக் கலைப் படைப்பை உருவாக்க முடியாது. நிதர்சனத்தில் கலைஞன் கண்டது, கேட்டது, உணர்ந்தது என்பவற்றையே இங்கு அனுபவம் எனக் கருதப்படுகின்றது.

ஒருவன் தான் பட்ட அனுபவத்தைக் கட்டுரை வடிவிலே விபரிக்கலாம். ஆனால் அனுபவித்ததை அப்படியே திருப்பிக் கூறுவது மட்டும் கலைப்படைப்பாகாது; கற்பனை கலந்து கொடுக்கின்றபோது அது கலைப் படைப்பு என்னும் தகுதியைப் பெறுகின்றது.

கலைப் படைப்புக்கு இருக்க வேண்டிய இன்னொரு தனி அம்சம் மீள் உருவாக்கம் செய்யப்படாத் தன்மைஆகும். எனவே கலைப் படைப்பானது ஒரு தனித்தன்மை பெற்று விளங்குகின்றது. ஒரு கலைப் படைப்பின் பிரதி கலைப்படைப்பு எனக் கருதப்படுவதில்லை.

> **கொழும்புத்துறை புனித சூசையப்பர் குருமட முத்தமிழ் மன்ற விழாவில் பேராசிரியர் கிருஸ்ணராஜா ஆற்றிய சிறப் புரையின் சாராம்சம்.**
>
> தொகுப்பு: **இ. ஸ்ரலின்**

கலை என்பது தனிமனித, சமூக, ஒழுக்க விழுமியங்களைப் பெற்றிருத்தல் வேண்டும். ஒரு கலைப் படைப்பு என்ன விழுமியங்களை உயர்த்தி நிற்கின்றது என்பது முக்கியமான விடயமாகும். ஒரு விஞ்ஞானக் கட்டுரைக்கும், இலக்கியக் கட்டுரைக்கும் இடையே வேறுபடுத்தி நிற்கும் அம்சம் விழுமியமேயாகும். விஞ்ஞானக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை விபரிப்பாக அமைகின்றது, இலக்கியக் கட்டுரை விழுமியங்களை உணர்த்தி நிற்கின்றது.

கலைப்படைப்புக்கும் ரசிகனுக்கு மிடையே தொடர்பு மிகவும் அவசியமானது. இல்லையேல் அந்தப் படைப்பை ரசிகனால் புரிந்துகொள்ள முடியாது. தான் பெற்ற அனுபவத்தை ரசிகனுக்கு உணர்த்தக் கூடியதான தன்மையை கலைஞன் தன் படைப்பிலே உருவாக்கவேண்டும். அதாவது கலைஞனுக்கே உரிய தனிப்பட்ட அனுபவத்தை பிறருக்குப் புரியவைக்கக் கூடியதாக வைக்க வேண்டும். இதனை மற்றவர்களால் பெறமுடியாத அனுபவத்தை தருகின்ற தன்மை எனலாம். தான் பெற்ற அனுபவத்தை வாசகன் அல்லது ரசிகன் பெறவைக்க வேண்டும். இல்லையேல் அதைக் கலைப் படைப்பாகக் கூறமுடியாது. எனவே கலைப் படைப்பானது புரியப்படக் கூடியதாகவும், கலைஞனின் அனுபவத்தைத் தானும் பெறச்செய்வதாகவும் இருக்கவேண்டும்,

கலைக்குரிய அனுபவம் என்ன? சாதாரண உலக அனுபவமல்ல. அது ஒரு உள்ளுணர்வு அனுபவம் எனக் கொள்ளப்படுகின்றது. கலாயோகி ஆனந்தக்குமாரசாமியும் உள்ளுணர்வால் பெற்ற அனுபவத்தையே குறிப்பிடுகின்றார். ஆனால் இது நிராகரிக்கப்படக் கூடியது.

புற உலக அனுபவமே பல உள் அனுபவங்களுக்கு அடிப்படையாக அமைகின்றது. ஒருவன் இறைவனை உருவகமாகக் கற்பனை பண்ணுகின்றபோது மனித உருவத்திலேயே காண்கின்றான். இந்தக் கற்பனையானது அனுபவத்தின் அடிப்படையில் எழுந்த ஒன்றாகும். ஆனால் புறநிலை அனுபவமே கலைப்படைப்பாகாது.

எனினும் அது கற்பனைக்கு ஊற்றாகின்றது. அனுபவத்தின் கூறுகள் சேர்க்கப்பட்டே கற்பனை உருவாகின்றது. அனுபவமின்றிக் கற்பனை செய்ய முடியாது. கலைஞன் பல்வேறு அனுபவத்தில் தான் பெற்றதையே தொகுத்துத் தருகின்றான். அவனது தெரிவு வாசகனைக் கவருகின்றபோது அது சிறந்த கலைப்படைப்பாக அமைகின்றது.

ஒரு கலைப் படைப்பின் வெற்றியையும் தோல்வியையும் நிர்ணயிப்பது ரசிகன். கலைஞனின் அனுபவத்தை ரசிகன் பெற்றால் அந்தப் படைப்பு வெற்றி பெறுகின்றது. எனவே ரசனை முக்கியமான ஒன்றாகும்.

மனிதனின் ரசனை என்பது ஒரு கலைஞனின் படைப்பை நுகரும்போது அவனுள் ஏற்படுத்தப்படுகின்ற தாக்கமாகும். ரசனை அழகைப் பார்வைப் புலனுக்குரிய ஒன்று எனும் குறுகிய கருத்தில் கையாளப்படுகின்றது. ஆனால் செவிப் புலனுக்குரியதும் ரசனை அழகுக்குள் அடங்கியுள்ளது.

அழகு என்பது எதிலேயிருக்கின்றது என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு மூன்று வகையான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

1. புறபொருள்வாதம்

அதாவது கலைப் படைப்பிலேயே அழகு தங்கியிருக்கின்றது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. உணர்ச்சிவாதம்:

இது தனி ஆளின் உணர்ச்சி அனுபவத்தில் தங்கியுள்ளது. ஒருவருக்கு அழகானதாகத் தெரிவது இன்னொருவருக்கு அதே உணர்வை ஏற்படுத்துவதில்லை.

8. தோற்றப்பாட்டு வாதம்:

தனி ஆளுக்கு மட்டுமோ அன்றேல் கலைப்படைப்புக்கு மட்டுமோ உரியதல்ல. ஆனால் ஒருவனின் பார்வைக் கோணத்தைப் பொறுத்தது. ஒரு பொருள் ஒரு கோணத்தில் பார்க்கின்றபோது அழகற்றதாகத் தோன்றக்கூடும். ஆனால் அதே பொருளை இன்னொரு கோணத்தில் பார்க்கும்போது அழகாக தோன்றக் கூடும்.

அழகு எங்கு இருக்கின்றது என்பது ஒரு கருத்தற்ற கேள்வியாகும். அழகு என்பதும் அழகில்லை என்பதும் ஒரு மதிப்பீட்டுச் சொல் (Judgement) என்பதுதான் ஏற்றது.

இனி கலை இலக்கியக் கோட்பாடுகள் பற்றிப் பார்ப்போம். இவை நான்கு வகை. முதலிரண்டும் சிற்பம், ஓவியம் என்பவற்றிற்கும்; ஏனைய இரண்டும் இலக்கியத்திற்கும் பொருந்தும்.

1. இயற்பண்பு வாதம்:

இயற்கையிலுள்ளதை அப்படியே படைப்பதுதான் கலைப் படைப்பாகும் என்பது.

2. கற்பனா வாதம்:

இயற்கையில் கண்டதின் சில பண்புகளை மிகைப்படுத்திக் காட்ட வேண்டும். இருப்பதை அப்படியே படைத்துக் கொடுப்பதில் என்ன பயன் எனக் கருதுவது.

3. யதார்த்த வாதம்:

உள்ளதைச் சொல்வதல்ல சொல்வது செயலுக்குத் தூண்ட வேண்டும். சமூகப் பணியினை மேற்கொள்ளவேண்டும்.

4. இருப்பு வாதம்:

இலக்கியமானது மனித அவலங்களை விபரிப்பதாக இருக்க வேண்டும்.

கலையிலே குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. நேரடியாகச் சொல்லமுடியாதவற்றை குறியீட்டின் மூலம் சொல்லிவிடலாம். ஆனால் குறியீட்டின் கருத்தை வாசகன் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

ஒரு கலைஞன் அறிவாளியாக இருப்பான். அவனது அறிவு பரந்து செல்லும்போது அவனது கலைப் படைப்பின் தரமும் உயரும்.

கலையானது வாழ்வோடு தொடர்புடையதால் அதற்குச் சமூகப் பணி உண்டு. அவை மனித விழுமியங்களை உணர்த்தி நிற்க வேண்டும்.

**அட்டைப் பட விளக்கம்**

''நான்'' வெளியீட்டுச் சின்னம் அட்டைப் படமாக அலங்கரிக்கப் பட்டுள்ளது. உங்கள் சிந்தனையில் உதித்த விளக்கத்தை எழுதி அனுப்புங்கள். தரமானவற்றை சிறப்பிதழில் வெளியிடுவோம்.

— ஆர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசானின் பதில்கள்

கே. பெண் விடுதலைக்கான போராட்டம் இடம்பெறும் இக்காலகட்டத்தில் கூட பெண்களை அடிமைப்படுத்த முனையும் பச்சோந்திகளைப்பற்றி நானே உன் கருத்து என்ன ?

ஜெயபாரதி, கிளிநொச்சி

ப. தம்மைச் சூழவுள்ள புற உலகு பல மாற்றங்களைக் கண்டுகொண்டிருக்கிறது என்பதை உணராதவர்கள்; மாற்றத்தை விரும்பாதவர்கள்; மரபினைப் பேணுபவர்கள். காலம் இவர்களை மாற்றிவிடும்.

கே. நான் தோல்வியுறும் சந்தர்ப்பங்களில் என்னைச் சூழவுள்ளோர் என்னை எளனம் செய்வதால் அடிக்கடி தற்கொலை செய்யக்கூட எண்ணியதுண்டு. வாழ்வில் தோல்விகளையும், எளனங்களையும் தாங்கும் மனப்பக்குவத்திற்கான வழி என்ன ?

கெங்காதரன், மன்னூர்

ப. தோல்விக்கான காரணங்களை உணர்ச்சிவசப்படாமல் அறிவு பூர்வமாகச் சிந்திக்க வேண்டும். காரணங்களை அறிவு பூர்வமாகக் கண்டு கொண்டால், விட்ட பிழைகளை மீண்டும் விட்டு தோல்வி காண மாட்டோம். எளனம் செய்பவர்களும் மனிதர்கள்தான். இச் சமூக அமைப்பு மனிதரைச் சுயநலவாதிகளாக்கியுள்ளது. எளனம் செய்பவர்கள் அதன் மூலம் தம் மன வக்கிரங்களுக்கு வடிகால் காண்கின்றார்கள். அவர்களையும், உலகையும், தோல்விக்கான காரணங்களையும் விளங்கிக் கொண்டால் மனப்பக்குவம் தானக வரும்.

கே. தன் கையாலே தன் கண்ணைக் குத்திக்கொள்ளும் எமது சமூகத்தின் இன்றைய நிலையிலிருந்து விடுபட நான் கூறும் அறிவுரை என்ன?

அமலன், யாழ்ப்பாணம்.

ப. கண்ணில் வலி ஏற்பட்டு தாம் குத்தியதாற்தான் இந்த வலி வந்தது என்பதை உணர்ந்ததும் தம் கையால் கண்ணைக் குத்துவதை விட்டு விடுவர்.

கே. குடும்பத்தில் சகோதரங்களுடன் பிறந்தும் தன்னைத்தானே அனுதை என்று கூறிக்கொள்ளும் மனப்பக்குவமுடைய சகோதரனுக்கு 'நான்' கூறும் அறிவுரை என்ன?

ஞா. சாந்தா, வளன்புரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப. இவரை நான் மனப்பக்குவமுடைய சகோதரன் என்று கூறமாட்டேன். உலகில் யாரும் அனாதையல்ல, மனிதன் ஒரு சமூகப் பிராணி. இச்சமூக உறவு குடும்பம், பிரதேசம், இனம், மதம், நாடு என விரிந்து செல்லும். இவ்வட்டத்துள் தன்னை இணைப்பதன் மூலம்தான் மனிதன் வாழ்கிறான். சமூக, பொருளாதார காரணங்கள் இவற்றிலிருந்து அவனைத் தனிமைப்படுத்துகையில் அவன் அந்நியமாகி, அனாதை என்ற உணர்வு ஏற்படுகிறது. மனித சமூகத்துடன் இணைவதன் மூலம் இந்த அந்நியத்திலிருந்து விடுதலை பெறுவதே மனிதனின் கடன்.

கே. குடும்ப அமைதிக்காக, போலி கௌரவத்திற்காக மனைவியின் பிற்போக்குவாத நடவடிக்கைகளுக்குச் சரணாகு , மனைவியின் கைப்பொம்மையாக இயங்கும் கணவன் பற்றிய நானின் கருத்து என்ன?

**கணேஷ்**, சாவகச்சேரி.

ப. அப்பாவி.

கே. தீய சிந்தனைகளையூட்டும் வீடியோ படக்காட்சிக்கு செலவிடும் பணத்தின் ஒரு பகுதியையேனும் அறிவுப்பசியைப் போக்க முனையும் சஞ்சிகைகளுக்குச் செலவிடத் தயங்கும் பெற்றோர், பெரியோரின் மயக்கத்தைப் போக்க வழியென்ன?

**மாலதி**, குருநகர்.

ப. தூங்குபவரைப் போல நடிப்பவரை எழுப்ப முடியாது. எனினும் எறும்பூரக் கற்குழியும்.

கே. நேரமில்லை, நேரமில்லை என்று நேரத்தை வீணடிக்கும் கற்றவர்கள், கற்றதனால் ஆன பயனை மற்றவர்கட்கும் பகிரத் தயங்குபவர்களின் தயக்கத்தைபோக்க நான் கூறும் ஆலோசனை என்ன?

**செயோன்**, வவுனிக்குளம்.

ப. மேலும் மேலும் அவர்களை நச்சரித்துப் பயனைப் பெறுதலே.

---

எமது "**இலக்கிய நண்பர் நண்பியர்**" கழகத்தில் சேர விரும்புவோர், தங்களைப் பற்றிய விபரத்துடன் தொடர்புகொள்ளவும்.

முகவரி;

**கணேஸ் உதயசங்கர்,**
**34, உதயானந்தா,**
**வவுனியா,**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் பூங்கா

**வணக்கம் !**

பாடும் பறவையினம் பறந்தோடி வந்தது போல்
ஓடும் முகிற் கூட்டத்தை ஒன்றிணைத்துச் சேர்ந்ததுபோல்
வாடும் பயிர்களுக்கு வான்மழையே பொழிந்ததுபோல்
நாடி வந்ததுவே நற்றமிழ் இதழ் மலர்ந்த ''நான்''
கூடி வரவேற்று கூர்மையாக நாம் படித்து
கோடி வணக்கங்கள் கூறி மடல் தொடுக்கின்றோம்.

S. M. ஜெயந்தினி – அரியாலை
தே. ஜனிதா – குழமங்கால்

**மலர்ந்தும் மலராத...**

சிறியவர், பெரியவர், படித்தவர், பாமரர் என்ற பேதமற்று எல்லோருக்கும் ஏற்றதான தேன் சுவை போன்ற ஆக்கங்களைப் பிரசுரித்து, மக்கள் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்துவிட்ட ''நான்'' மலரே, மலர்ந்தும் மலராத மலர்களாய் இருக்கும் புதிய பல எழுத்தாளர்களுக்கு இடமளிப்பதன் மூலம் அவர்களின் திறமையை வளர்ப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

கனக. ஞானசுந்தரம்
வட அல்வையம்பதி

**எல்லாமே இனிமை !**

மலர்ந்தும் வாடாத மலரே! உனக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்கள். மலருக்குள் தேன் மட்டும் இனிமை; உனக்குள் எல்லாமே இனிமை தான்! தாழ்வு மனம் கொண்டவர்கள் தரணியில் தலைநிமிர்ந்து நடக்க நீ காட்டும் வழிகாட்டுதல்களுக்கு எம் பாராட்டுகள்.

பூ. வனிதா – யாழ்நகர்
M. பாலசுப்பிரமணியம் – பத்தனை

**வார்த்தைகளே இல்லை !**

''நான்'' என்றைக்கு முதன்முதலில் என் கைகளில் கிடைத்ததோ அன்றிலிருந்து நான் ''நான்''இன் பரம ரசிகை. நானின் உள்ளடக்கங்களை விமர்சிப்பதற்கு வார்த்தைகளே இல்லை. நான் நானேதான். மலரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சிகரமான புத்தாண்டில் ''நான்'' மலர் மணம் வீச எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்!

மு. கீத்தா — யாழ்நகர்

**மன்றாட்டு**

நிலை தடுமாறி நிற்கும் நெஞ்சங்களுக்கு நேர்வழி காட்டுகின்றாய். உன் பணி தொடர ஆண்டவனிடம் மன்றாடுகின்றேன்.

வித்தியா பாலசுப்பிரமணியன்

**நல்வாழ்த்துக்கள்**

இறுதி இதழின் ஆக்கங்கள் எல்லாமே தரமானவையாக இருந்தன. சிறப்பாக கமலா இளங்கோவன், ஆனந்தி செந்தில், அருந்ததி மகாதேவன் ஆகியோருக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

க. உதயசங்கர், வவுனியா.

T. அருள்தாஸ், சூசை, பிறேமா — நாச்சிக்குடா

**பேதைகள் வாழட்டும் !**

''மாறியது நெஞ்சம்'' சிறுகதை மட்டுமல்ல, பலருடைய வாழ்வில் அது சொந்தக் கதை. ''மௌனங்கள் கலையும்போது'' நன்றாய்த் தொடர்கிறது. 'ஒரு மேதையும் ஒரு பேதையும்'' சிறுகதை, மேதைகளைச் சிந்திக்க வைக்கட்டும் — பேதைகளை வாழ வைக்கட்டும்.

க. கமலாம்பிகை — மீசாலை

காயித்ரி கிருஸ்ணா — முருங்கன்

**அசாதாரணம் !**

பெரும் வளர்ச்சி பெற்ற நாடுகளில், தனிமனித வளர்ச்சிக்கு உதவும் ஏராளமான நூல்களும் சஞ்சிகைகளும் வெளிவருகின்றன. இவற்றை மக்களும் விரும்பி வாங்கிப் படித்து, தமது வாழ்வை வளம்படுத்துகின்றனர். தமிழ் மொழியில் இத்துறை சார்ந்த பிரசுரங்கள் வெளிவருவது மிகவும் குறைவாகும். ஆயினும் ஈழத்தில் ''நான்'' சஞ்சிகை இத்துறையில் அசாதரரணமான பங்கை ஆற்றியுள்ளது.

டாக்டர் க. சசிகுமார் — பருத்தித்துறை

---

**பேனு நண்பர் :** வாசுகி பரமசாமி, சிவன் வீதி, உரும்பராய் கிழக்கு.

**பொழுதுபோக்கு :** சஞ்சிகை வாசித்தல், சமூக சேவை, இசை ரசனை.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY,
JAFFNA,

# தொண்டுபுரியும் "தொண்டன்"

மட்டுநகர் மறை பணியின் வளர்ச்சிக்கு ''தொண்டன்'' ஆற்றும் பணி போற்றுதற்குரியது. கொலை, கொள்ளைச் செய்திகளையே தினம் தந்து திசை திருப்பும் தினசரி சஞ்சிகைகளையே படித்து, மனவிரக்தியுற்றிருக்கும் மக்கள் மனச்சாந்தி அடைய – மறை உணர்வுடன் செயற்பட, பல இன்னல்களையும் தாண்டி கிறிஸ்தவ இலக்கியத் திங்கள் ஏடாக ''தொண்டன்'' ஆற்றிவரும் பணி ஓர் எதிர்நீச்சல்தான்!

புதிய பல எழுத்தாளர்களின் அரிய பல சிந்தனைகளைத் தருவதோடு பல பாகத்திலும் எழுத்துலகின் பாலமாகத் ''தொண்டன்'' தொண்டு புரிகின்றான்.

தொடர்கதை, கவிதை, கட்டுரைகள் மூலம் மனித முன்னேற்றத்தின் மகத்துவத்தை மக்கள் முன் வைப்பதில் ''தொண்டன்'' தொண்டு வளர்க என வாழ்த்துகின்றோம்!

தொடர்பு : **தொண்டன், ஆயர் இல்லம், மட்டுநகர்.** விலை : **3-25**

---

# புது வீடு

**ஆனந்தி**

**— சிறப்பு மலரில் மலரும் தொடர்கதை —**

நான் ஒரு கட்டடக் கலைஞனல்ல. கற்பனைவாதி என்றளவில் மட்டுமே இது எனக்குப் பொருந்தும். ஒரு பிரமாண்டமான புதுவீட்டைக் கட்டிப் பெறுவதற்கு, இலட்சக் கணக்கான பணப் புதையல் தேவைப்படுகின்றது. நான் கட்டித் தரப்போகும், காலத்தால் அழியாத இந்தப் புதுவீடு மேலே குறிப்பிட்ட, நடைமுறை லட்சியத்திற்கு மாறான உண்மை. இந்த உண்மையைச் சொல்லத் தயாரான ஆன்மீக ஞானம் ஒன்று மட்டுமே எனது தகுதி. அதை வைத்துக் கொண்டுதான் இந்த வீடு உங்களுக்காக நான் எழுதப் போகிறேன். அதன் வாசலில் மறுபடியும் சந்திப்போம்.

---

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகள் - 23

**இடமிருந்து வலம்**

1. மாதவெளியீடு
7. கர்ணன்
13. மார்க்கம்
19. தமிழினம்
28. அன்பு

**மேலிருந்து கீழ்**

1. மார்கழி
2. தன்மானம்
3. வெக்கம்
6. காடு
7. அம்மி

**பரிசு பெறுபவர்**

செல்வி யோகா கிறிஸ்ரோபம்
''இமெல் வாசா''
முருங்கன்

பரிசு அளிப்பவர் : **கமலா இளங்கோவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வாசக நண்பர்களுக்கு

"நான்" மஞ்சரியும் நான் வெளியீடுகளும் உங்களைத் தொடர்ந்து வர யாம் பெற்ற அறிவின்பத்தை நீங்களும் அனுபவிக்க, தாமதியாது தொடர்பு கொள்ளுங்கள்.

| Country | Naan (6 Issues) & Postage | 4 Naan Publications & Postage |
|---|---|---|
| England | £ 6 | £ 4 |
| Canada | $ 9 | $ 6 |
| France | 100 Franks | 50 Fanks |
| W. Germany | 25 Marks | 15 Marks |
| Rome | $ 8 u. s. | 5 $ u. s. |
| Singapore | $ 5 u. s. | 3 u. s. |
| India | 65 Rs. (Indian) | 40 Rs (Indion) |
| Middle East. | 5 $ u. s. | 3 $ u. s. |
| Zambia | $ 8 u s. | $ 6 u. s. |

**Name & Address :**

Fr. Vincent Patrick omi St. Joseph's Seminary, Colombuthurai, Sri Lanka. For further details please contact:

Mr. R.J. Constantine, 51 Lathom Road, East-Ham, LONDON. E6

Fr. A. J. V. Chandrakanthan 59 Herridge Street, Ottawa, Ontario K. I. S048 CANADA.

Mr. D. S. Fernado, 114 Rue De Caen 924000 Courbeovic, FRANCE

Mr. S. Packiyanathau, Graben Str. 39/3, 7157 Murrhardt WEST GERMANY

Fr. G. Rosario O. M. I. St. Paul'e Iustituta, Poonamalai Madras. 600056 INDIA.

Fr. L. B. Rayappu, C. P. 9061, 00100 Rome - Aurelio, ITALIA.

Fr, John Mary, Thomson Rd. P. Box 13 SINGAPORE 9157

Mr. S. Xavier, K. A I. A. Custom P. O. Box 30084 Jeddah - 21477 K. S. A.

Mr. J. D. R. Joseph P. O. Box 33967 Lusaka. ZAMBIA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோ எகட்டன் வழங்கும்

# பரிசுப்போட்டி!

**தோலகட்டி தயாரிப்புகளை வாங்கி அதன் லேபல்களை சேகரித்து பல அரிய பரிசுகளைப் பெறுங்கள்!**

இதோ விபரங்கள்:

1. தோலகட்டி நெல்லிரசத்தின் லேபல்களைச் சேகரியுங்கள். ஆகக் கூடுதலான லேபல்களை சேகரித்து எமக்கு அனுப்பி ரூபா 2500/- (இரண்டாயிரத்து ஐந் நூறு) பெறுங்கள்.
2. போலி லேபல்களைக் கண்டுபிடித்து போலி லேபல்களை விற்கும் (அல்லது நெல்லிரசத்தை) வியாபாரியின் பெயர் விலாசத்துடன் அறியத்தரவும் எமது ஆராய்வின் பின் நிரூபிக்கப்பட்டால் ரூபா 1000/- (ஆயிரம்) வழங்கப்படும்.
3. தோலகட்டி நெல்லிரசத்தில் சக்ரீன் என்னும் சேர்க்கைப்பொருள் சேர்க்கப்பட்டிருக்கிறது நிரூபிக்கப்பட்டால் (நிரூபித்தால்) ரூபாய் 5000/- வழங்கப்படும்.

மேற்கண்ட போட்டிகளில் செனித் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஊழியரும் தோலகட்டி ஆச்சிரமத் தொழிலாளரும் தவிர்ந்த ஏனையோர் பங்கு பற்றலாம் இப் போட்டி சம்பந்தமாக எவ்வித கடிதத்தொடர்பும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

போட்டி முடிவு தேதி 20—12—85

விபரங்களும் பரிசு பெறும் இடங்களும் 22—12—85 உள்ளூர் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.
போட்டி விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

அனுப்பப்பட வேண்டியமுகவரி.

தோலகட்டி தயாரிப்புகள்,
தோலகட்டி
வயாவிளான்.


PUBLIC LIBRARY
JAFFNA

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். பிரதானவீதி, கலைவாணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.